தென்மொழி

வினையும் விளைவும் தோற்றமும்!

என்மேல் பழிகளை இறைக்கின் றார்களாம்;
 இழிவுகள் என்மேல் சாற்றுகின் றார்களாம்;
புன்மொழி செவிசுடப் புகலுகின் றார்களாம்;
 பொருளையும் புகழையும் விரும்புகின் றேனும்!
'என்னிவற் றிற்கு(உ)ம் விளக்கம்?'- என்றோர்
 இன்னரும் அன்பர் எழுதி' யிருந்தார்!
'சொன்னவை யாவிலும் ஒருதுளி யாகிலும்
 சொல்லுக, உண்மை இராதா?'—என்கிறார்!

உண்மையாய் அவர்போல் உள்ளவர்க் குரைக்கிறேன்:
 உண்மை இருக்கலாம்! ஆயினவ் வுண்மையின்
ஒண்மை வடிவினை யார்வந் துரைப்பது?
 உரைப்பவர் மெய்யரா பொய்யரா என்பதைத்
திண்மையாய் எதைக்கொண் டளப்பது? தீர்வுசெய்
 தீங்கினை முங்கினை எப்படித் தெளிவது?
நுண்மையாய் அவர்திறம் நம்பிடு வீரெனில்,
 நுவலுக, என்னையேன் நம்பிட வில்லை,நீர்?

பனைமரத் தடியிலே பாலினை அருந்துவார்
 பார்ப்பவர்க் கெங்ஙனம் படுவரோ அவர்போல்,
எனைநிறத் தாயினும் பொதுநிலைக் குற்றவர்
 எவர்விழிக் காயினும் அவர்மனக் காட்சியர்!
தினைமனங் கொண்டு பனைமனம் தேறுவார்
 தேற்றம் நிறுப்பன காலமும் செயலுமே!
வினைபடல் வகையினில் பற்பல விளைவுகள்
 வேறு வேறு தோற்றமென் றுணர்கவே!

சுவடி 21
ஓலை 6

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1-25 உரு

நமக்கு வந்த மடல்கள்.

0: 1067 : மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு,

வணக்கம். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தமிழகம் முதன்மை இடத்தைப் பெறுவதாகத் தமிழகத்தின் அடிமை அரசு பெருமை பாராட்டிக்கொள்கின்றது. பிற இனத்தவர் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டிருக்கும்போது தமிழர் மட்டும் குறைத்துக் கொள்ளவேண்டுமென்பது ஆய்வுக்குரிய கேள்வியாக இருக்கின்றது. சில பார்ப்பன மகளிர் நிறைய பிள்ளைகளைப் பெற்றதற்காகக் காஞ்சி காமகோடி பரிசளித்திருக்கிறார்! இந்நிலையில் குடும்பக்கட்டுப்பாட்டைத் தமிழர்களின் மீது மட்டும் திறம்படத் திணிக்கின்ற தில்லியின் சூழ்ச்சியைத் தங்களைப் போன்றோர் அம்பலப்படுத்த முன்வந்தால் நன்றாக இருக்கும். அதனால், தமிழர்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளக் கூடாது எனப் பேசுவதும் எழுதுவதும் தவிர வேறு வழியில்லை என எனக்குத் தோன்றுகின்றது. இத்துறையிலும் எண்ணிப் பார்க்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தோழமை கலந்த வணக்கத்துடன், குணா, வெங்கலூர்-1

0: 1068 : அன்புகொண்ட பாவலரேறு ஐயா அவர்கட்கு; தங்களின் தமிழ் அடி தொடர்ந்து வரும் உள்ளத்தின்வணக்கங்கள். 17 அகவை முதற்கொண்டு (தற்போது 25) தங்களின் வழியினைப் பின்பற்றி 'நாய் பல நாற்புறம் வாய் திறந்தாலும்' தமிழ்ப்பணி செய்து வருகின்றேன். அதன் காரணமாக அகர வரிசையிலிருந்து தொழில் நுட்பக் கல்லூரி வரை, தேனினும் இனிதான நம் தாய் மொழியில்தான் பயின்று வந்தேன். இயன்றவரை நானும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு படித்துக் கொண்டு என் நண்பர்களையும் நான் தொடர்பு கொண்டு, உள்ள விளையாட்டுக் கழகங்களையும் வாங்கச் செய்து வருகின்றேன். மேலாக நான் என் சிறப்பு வகுப்பிலும் அங்கு வரும் நம் இளந்தளிர்களிடத்தும், என் காதலியிடத்தும்கூட நம் மொழிப்பற்றை - இனப்பற்றை உருவாக்குகின்றேன். கடந்த தேர்தலில் தங்களின் கருத்தையே நானும் ஏற்றுச் செயலாற்றினேன்.

இவ்வாறாக முழுக்க முழுக்கத் தங்களின் சிந்தனைகளைச் செயல்படுத்த இளைஞர்கள் கூட்டம் உங்களுக்குப் பக்கவலுவாக இருக்கின்றது. எனவே தங்களின் மேன்மை மிக்க தாய்மொழிப் பணியில் தமிழகத்தின் மீட்சியில் மேன்மேலும் ஈடுபட நம் தமிழகம் மிகுதியாக எதிர்நோக்குகின்றது என்றுகூறி முடிக்கிறேன்.

அன்புடன், — ந இளங்கோ, மதுரை-10

0: 1069 : பெருமதிப்பிற்குரிய அய்யா பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, தற்போது நான் 'நமது கழகத்தின்' மாவட்ட அமைப்புச் செயலாளராக விருக்கின்றேன். எம். ஜி. ஆர். கட்சியிலிருந்து விலகிவிட்டேன். தாங்கள் அண்ணன் எசு. டி. எசு. அவர்களுடன் இணைந்து மக்கள் பணி புரிய வேண்டும் என்பது என் அவா. தமிழகம் விழிப்புற்று எழ, பல்வேறு போராட்டங்களைத் தொடங்குங்கள். அய்யா பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழறிந்தவர்களுக்கு மட்டும் தெரிந்தால் போதாது. தமிழக அன்றாடம்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] தி.பி.௨௦௧௬ மீனம் [மார்ச்சு-ஏப்-85] [ஓலை 6

செந்தமிழ்ச்சொற்பிறப்பியல்அகரமுதலி!

செய்ந்நன்றி கொன்ற அரசும் இயக்குநரும்!
முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துவிட்டார்களே!

(உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)

(உரை: ஒருவர்க்குக் காரணத்தாலும், பொருளாலும், காலத்தாலும் செய்த உதவி அம்மூன்று அளவுகளால் மட்டும் அளவிடப் பெறுவது அன்று; அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் பண்பினாலும் அளவிடப் பெறுவது.)

திக்கி முக்கித்திணறி, 'இதோ வருகிறது

அதோ வருகிறது', என்று அலேக்கழிப்புக் காட்டிய **மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி'**, அவர் எழுதிவைத்து மறைந்த மூன்றாண்டுக்ளுக்குப் பின்னர், சென்ற மாதம், ஒரோவழி, வெளிவந்து நமக்கெல்லாம் ஓர் அமைதிப் பெருமூச்சை அவிழ்த்துவிட்டது.

உள்ளீட்டளவான், நாம் எதிர்பார்த்தவாறும், பாவாணர் அவர்கள் ஒழுங்கு செய்து, போலிகை (Speciman) காட்டிய வாறும் (**தென்மொழி** சுவடி 8; ஓலே 11-12 –பிப்-ஏப் 1971) நிறைவுறவின்றியும், வெளியீட்டளவான், கட்டும் செட்டும் செப்பமுற அமையாமலும், ஏதோ ஒருவகையான் அது கருவுயிர்ப்புப் பெற்றுள்ளது. இந்த அளவினும் காலத்தினுமாகிலும் வந்ததே என்பதில் நமக்கு யாவரையும் விட இரட்டை மகிழ்ச்சி யெனினும், ஏனைய பகுதிகளும், மடலங்களும் எழுதி வெளியிடும் நம்பிக்கையில் அவர் தீட்டுவைத்துள்ள திட்டங்களேயும், தீர்வுகளேயும் கண்டும் அவை தமிழுக்கு வாயாமற் போனதை விண்டும், உள்ளம் 'ஓ' வெனக் கதறி அழுதது. **'சென்று தேய்ந்திறுதல்'** என்னும் உத்திக்கும், **'கடைகொட்கச் செய்தக்கதாண்மை இடைகொட்கின் எற்றா விழுமம் தரும் (663)** என்னும் வினைத்திட்ப இலக்கணத்திற்கும் தமிழெழுச்சிக் கால வரலாற்றில், ஓர் எடுத்துக் காட்டாய், இவ்வகர முதலி அமைந்துவிடினும், பாவாணரின் நுண்ணிய நூற்புல வன்மைக்கும், உண்மை அறிவுக்கும், திண்ணிய எண்ணத்திற்கும் இடைவிடா ஈடில்லா உழைப்பிற்கும் இதுவே ஒரு கலங்கரை விளக்காகக் காலங்காலமாய் நின்று எதிர்காலத்து இவ்வரும்பெருந் துறையில் ஈடுபடும், நறும்பெரும் மெய்த்தமிழ் மொழி நூல் பேராசிரியர்களுக்குப் புரைமுட்டிப் போகாமல், கரை காட்டி, ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஓர் ஐயமும் இல்லே.

இனி, வெளிவந்துள்ள இச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியின் உள்ளுறைத் தகுதி நிலேகள் பற்றியும், அறிவாராய்ச்சித் திறம் பற்றியும் எடுத்துக்கொண்ட பணி எந்த அளவில் நிறைவேறியுள்ளது, எந்த அளவில் நிறைவேறுதல் வேண்டும் என்பன பற்றியும், இவ்வகரமுதலி வெளிவந்த வரலாற்றில் ஓர் உந்து காரணன் என்னும் அடிப்படையும், தகுதிப்பாடும், தாய்மைப்பேறும் கொண்ட நிலேயில் என் திறனுய்வுக் கருத்துகளேப் பின்னர் வெளிப்படுத்துவேன். அதற்கு முன்னர் இக் கட்டுரையில், அந்நூல் வெளிப்படுத்தப்பட்ட மூலி நிலேகளே மட்டும் ஆற்றெரு மனக்கிளர்ச்சியால் இங்குரைக்க விரும்புகின்றேன். அன்பர்கள் இவ் வெதிர்பாராக் கருத்துரைகளுக்காக என்னே மிகவும் பொறுத்துக் கொள்வார்களாக.

தமிழ்மொழியின் வீழ்ச்சி வரலாற்றில், அதற்குரிய எத்தனேயோ காரணங்களில், தமிழறிஞர்கள், புலவோர்கள் எனப் படுபவர்கள் வெறும் மேலோட்டமான உலகியல், பொருளியல், வாழ்வியல் காரணங்களுக்காகவும், தாம் புகழ்பெறும் ஆசை அங்காப்புகளுக்காகவும், ஒருவரை ஒருவர் மறைப்பதும், குறைப்

பதும், புறந்தள்ளுவதும், புறங்கூறி இகழும் இழிவும் இகலும் பகையும் உண்டாக்குவதும், அதனால் தமிழ் அழிபடுவதும் ஆகிய நிலை தலையாய அடிப்படைக் காரணமாக இருந்து வருகிறது. திருவள்ளுவர் வரலாறே இதனை மெய்ப்பிக்கப் போதுமானதாகும். இவ் வரலாறு இன்றும் தொடர்கின்றது என்பதற்கு அரசியல், குமுகவியல் பொருளியல் முதலிய துறைகளில் எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காட்டமுடியும் என்றாலும், **தமிழியல் துறையில், இக்கால் வெளியிடப் பெற்றுள்ள இப் பேரகரமுதலியே ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டு ஆகும். அந்த அளவில் இதன் உண்மை வரலாறும், முயற்சிகளும், அருப்பாடும் அடியோடு மறைக்கப்பட்டுள்ளன.** முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைத்த இத் தமிழ்க் கெடும்புப் பணி, உண்மை அறிவை வளரவிடாது; உண்மை அறிஞர்களைத் தோன்றவிடாது. இதனால், இவர்களுக்கு இன்று கிடைக்கும் ஊதியமும் தற்காலிகப் புகழும் காலப்போக்கில் கரைந்து போய்விடும். இந்தக் கொடுமையான வரலாற்று மறைப்புக்கு முழுமுதற்காரணமானவர்கள் தமிழக அரசினரும், அகரமுதலித்துறை இயக்குநருமே ஆவார்கள். இந்த வகையில் இவர்கள் செய்ந்நன்றி கொன்றவர்கள்; சிறுமையர்கள்! இத்தகு வரலாற்றுப் பெருமை மிக்க வெளியீட்டில் இவர்கள் செய்த சிறுமைச் செயல் என்றும் இவர்களின் தகுதி நிலைக்கு ஏற்பட்ட ஒரு கருமைப் புள்ளியே!

ஓர் அரும்பெரும் ஆக்கப்பணியில், அதன் தொடக்க வரலாறும் ஒரு கூறாகும். இந்நூல் வெளிவரவேண்டுமென்பதில்தாம் எத்துணை முயற்சிகள்! எத்துணை அலைச்சல்கள்! அலைக்கழிப்புகள்! எத்துணை ஏமாற்றங்கள்! இத்தனையையும், மூடி மறைத்து விட்டுப் புறக்கணித்துவிட்டு, ஏழெட்டு பேரைக் காவுகொடுத்துக் கடைகால் வெட்டி அதில் போட்டு மூடி, அதன்மேல் அழகிய வளமனை எழுப்பி அதில் வள்ளலார் பெரும்பணி மன்றமும், காந்தி கழகமும் வைத்திருப்பதுபோல், இந்நூலை அழகுற மிகமிகப் பெருமையுடன் வெளியிட்டு மகிழ்ந்திருக்கின்றனர், இதன் அறுவடை நாயகர்கள்! '**உழுது விதைத்தவர் ஒருவர்; வளர்ந்து பழந் தின்பவர் ஒருவர்**' என்பார்களே அது போலும், '**நல்ல வாயன் சம்பாதிக்க நாறல் வாயன் தின்பான்**' என்பார்களே அதுபோலும், வைக்கோல்மேல் படுத்த சுணங்கன் போல், வேறு யாரையும் உள்ளே விடாமல், தாமே தலைநின்று, இந்நன்றிக் கொலை செய்தவர்களின் செயலைக் கண்டு, பாவாணர் அவர்களின் ஆவியும் நாணும்; தலை குனிந்து வையவும் வையும்!

இந்த நூல் ஏதோ, கூட்டுக்குள் இருந்து கிளிக்குஞ்சு புறம் வந்ததுபோல் திடுமென வந்துவிடவில்லை. இதற்குப் பாவாணர் அவர்களின் கடுமையான அறிவுழைப்பு தேவைப்பட்டது என்றால், அதற்கு முன் அவரைத் தாங்கி நிலைநிறுத்தி, ஊக்கமும், ஆக்கமும் தந்து, இவ்வகர முதலி வெளியீட்டுக்கே முந்துவினை ஆற்றிய **தென்மொழி**யின் அரும்பெரும் முயற்சியும் ஒன்று தேவைப்பட்டது என்பதை, இன்றைய தலைமுறையினர் உணரார் எனினும், சென்ற தலைமுறையினர் நன்கு உணர்ந்திருப்பரே! இன்னும்,

இன்று இந்நூல் வெளியீட்டுத்துறையின் இயக்குநராகவிருந்து, இந்நூலைப் பெருமையுடன் கொணர்ந்திருக்கிறரே, பேரா. மதிவாணன் அவர்களின் இத்துறை நுழைவிற்கும், இந்நூல் ஆக்கத்தின் புறவினைகளில் அவர் ஈடுபாடு வேண்டும் என்னும் கருத்துத் தோற்றத்திற்குமே தென்மொழிதான் மூல காரணம் என்பதையும் இன்னும் சொன்னால் பாவாணர் இப்படி ஓர் அகர முதலியைத் தமிழில் செய்யவேண்டும் என்னும் கருவுணர்வுக்குங்கூட அது தான் காரணம் என்பதையும், எவரும் மறந்துவிடவோ மறுத்து விடவோ இயலாது என்பதை, இதைப் படித்த பின்னராகிலும் இதன் தொடர்புள்ளவர்கள், நினைவுக்குக் கொணர்வார்கள் என்று நம்புகின்றேன்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி ஒன்று தேவை என்று தென்மொழியில் பக்கம் பக்கமாய் எழுதியது இந்தக் கை. அதுபற்றி ஊர் ஊராய்ப் பேசி உண்மையை எடுத்துரைத்து, அன்பர்களுக்கு உணர்வூட்டி அவர்களைத் துணை நிற்கும் செயலுக்குக் கொண்டு வந்தது இந்த வாய்! அதுபற்றியெல்லாம், அகர முதலியின் பதிப்புரையில், 'அகரமுதலித் திட்டத்தின் தோற்றம்' என்னும் பகுதியில் ஒரு மூச்சும் விடக்காணேமே, ஒரு கோடும் கிழிக்கக் காணேமே, ஏன்? அதுபற்றியெல்லாம் மதிப்பிற்குரிய இயக்குநர்க்கும், அவரை ஊக்கிக் கொடுத்து உணர்வேற்றி, அதனால் நலம் பெற்று வாழ்கின்ற அரசப் பதவியாளர் ஒரு சிலருக்கும் தெரியாதா, என்ன? பின் அதை மறைத்தொழுகும் நோக்கந்தான் என்ன? அதை வெளிப்படுத்திவிட்டால் அதில் முன்னரே ஈடுபட்டு முயன்றவர்கள் பெரியவர்கள் ஆகிவிடுவார்கள் என்பதாலா? அல்லது, அதன் இப்பொழுதை நாட்டாண்மைக்காரரர்கள் சிறியவர்கள் ஆகிவிடுவார்கள் என்பதாலா?

இப்படியோர் அகரமுதலி தமிழுக்குத் தேவை என்று தீர எண்ணித் தென்மொழி ஓர் இருபத்தைந்து பக்க அறிக்கையைத் திட்டமாக் 1970 திசம்பரில் வெளியிட்டது. தென்மொழி சுவடி 8; ஓலை 8-9) அத்திட்டத்தில் பல தலைப்புகளின் கீழ் பல்வேறு கருத்துகள் மிக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கப் பெற்றன. அவை 1. அறிவும் அறியாமையும் கலந்து மயங்கும் நிலை, 2. பாவாணர் என்பவர் யார்? அவர் தகுதி என்ன? 3. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி என்பது என்ன? 4. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தமிழ்மொழிக்கு எவ்வகையில் இன்றியுமையாதது? 5. சொற்பிறப்பியல் அகரமுதலியைத் தொகுப்பதற்குரிய முயற்சி எத்தகையதென்பதும், அதனை வெளியிடுவதற்குரிய செலவு எவ்வள்வினது என்பதும், 6. இவ்வகர முதலிக்குப் பல்கலைக் கழகங்களும், முன்னுளைய (பேராயக் கட்சி) அரசும் துணை நிற்க முன்வராதது ஏன்? 7. தி.மு.க. அரசு அகர முதலித் தொகுப்பில் ஏதேனும் அக்கறை காட்டிற்ரு? 8. அரசினர் பால் செய்த முயற்சிகளும் அவற்றின் முடிவும்! 9. தி.மு அரசு பாவாணர் போன்றோரைப் புறக்கணிப்பதன் நோக்கம் என் வாக இருக்கலாம்? 10. அரசு செய்யத்தவறிய ஒன்றைப் பொ

மக்கள் செய்வதே பெருமை மிக்கது. 11. தென்மொழி தரும் செயல் திட்டம் என்ன? 12. என் இறுதியான வேண்டுகோள்— என்பன. இந்த அறிக்கையுடன் பாவாணர் அவர்களின் அறிக்கை ஒன்றும், 'வல்லான் வகுத்தவழி' என்னுந் தலைப்பில் வெளிவந்தது. அறிக்கையில் தி. மு. க. அரசின் மேல் வருத்தமுற்று எழுதிய பகுதியும், தென்மொழித் திட்டத்திற்கு இசைவளித்த பகுதியும் கீழ் வருமாறு :

''இந்தியை அடியோடொழிப்போமென்றும், தமிழிற்காக உயிரைக் கொடுப்போமென்றும், சொல்லிப் புகுந்த தி. மு. க. அரசும், ஆட்சியேற்று நாலாண்டாகியும் பேராசிரியரும் பெரு மக்களும் எத்துணையோ எடுத்துச் சொல்லியும், இதுகாறும் தமிழுக்கு எத்தகைய ஆக்கவேலையும் செய்யவில்லை. தி. மு. க. அரசிற்குத் தமிழ்ப்பற்று இல்லாமலில்லை யென்றும், ஏதேனும் திட்டம் வகுத்துக் காட்டினால் உடனே அதை நிறைவேற்றும் என்றும், சிலர் கூறியதால் அதையும் சிறப்பாகச் செய்து பார்த்தோம். தானாகக் கனியாதது தடியாலடித்தாலும் கனியாது' என்னும் உண்மையே விளங்கிற்று. .... தி.மு.க. சார்பான தமிழன்பர் சிலர், இன்னும் சற்றுப் பொறுத்திருந்தால் அரசு உதவும் என்பர். இலவுகாத்த கட்டுக் கதைக் கிளியும், பஞ்சு வெடித்தபின் ஏமாற்றமடைந்ததேயன்றி, இன்னும் சற்றுப் பொறுத்திருந்தால் பழுக்குமென்று கருதவில்லை. ஆதலால், இன்னும் தி. மு. க. உதவுமென்று காத்திருப்பது, அஃறிணையினும் இழிந்த பகுத்தறிவின்மையையே காட்டும்.........

....தமிழன்பரான பொதுமக்களின் உதவிகொண்டு இப் பணியை இன்னே செய்ய உ. த. க. பொதுச் செயலாளர் பாவலர் பெருஞ்சித்திரனார் தாம் வகுத்திருக்கும் திட்டத்தை உடனே செயற்படுத்த என் முழு இசைவையும் இதனால் தருகின்றேன். ''எல்லாம் வல்ல இறைவன் வகுத்த வழி இதுவேயாகும்''.

திட்டம் பதிவு செய்யப்பெற்ற உறுப்பினர்கள் 200 பேர், மாதா மாதம் பப்பத்து உருபா, தொடர்ந்து ஐந்தாண்டுகள் வரை அனுப்ப வேண்டும் என்பது. திட்டம் வெளிவந்த மறு மாதத்திலேயே 152 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். இதனைப் பின்னர் கலைஞர் அரசு ஏற்றுக்கொண்ட, மே-1974 இல் இதற்கு நிலையான 205 பேர் உறுப்பினர்களாக இருந்தார்கள். இத்திட்ட உறுப்பினர் சிலர் தமக் குண்டான முழுத் தொகையையும் பாவாணரிடம் முன்னரே தந்து விட்டனர். இறுதியில் இத் திட்டத்தின் வழி பாவாணர்க்கு அறு பதினாயிரம் உருபா சேர்ந்தது. இத திட்டத்தையொட்டிப்பாவாணர், அவர் வெளியிட விருந்த அகரமுதலிக்கு, ''தென்மொழித் திட்டத் தேவநேயன் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி'' (தென் மொழி சுவடி-10, ஓலை-10, மார்ச்சு '73) என்றே பெயர் கொடுக்க விரும்பியிருந்தார்.

தொடக்கத்தில் பாவாணர் செ.சொ.பி. அகரமுதலி 5 மடலங்களாக வெளிவரும் என்றார், பின்னர் 12 மடலங்களாகவும், 41 உட்

பிரிவுகளாகவும் வரையறுத்திருந்தார். (தென்மொழி சுவடி - 10, ஓலை 10). இறுதியில் இப்பொழுது வெளிவந்துள்ள அகர முதலியுள் 12 மடலங்களும், 25 உட்பகுதிகளுமாக அடைவு செய்யப்பெற்றுள்ளன. (செ. சொ. பி. பக். கஉ).

தென்மொழித் திட்ட அகரமுதலி அறிக்கையுள் கூறப்பெற்ற நெறிமுறைகள் பல. அவற்றுள் இரண்டு நெறிமுறைகள் முகாமையானவை. 1. எல்லா மடலங்களிலும் உறுப்பினர்கள் பெயர்கள் முழுமையாக அச்சிடப்பெறும். முதல் மடலத்தில் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்த்துப்பா (முடிந்தால்) பாடலோடு இருக்கும். (நெறிமுறை-4.)

2. செ. சொ. பி.-யின் எல்லா மடலங்களும் அடங்கிய தொகுப்பு ஒன்றும், ஒவ்வோர் உறுப்பினர்க்கும் அன்பளிப்பாகத் தரப்பெறும். (நெறிமுறை-எண். 5.) என்பனவாம்.

இத்திட்டம் என்னனது? இதில் பாவாணர் இசைவொடு கூறப்பெற்ற உறுதிமொழி என்னனது? 60 ஆயிரம் உருபாவைப் பெற்றுக்கொண்ட பாவாணர் பின்னர் அத்திட்டத்தை அரசு எடுத்துக்கொண்ட போதும், தமக்குக் கொடுக்கப்பெற்ற தொகையிலாகிலும் திட்ட உறுப்பினர்களுக்கு ஆளுக்கொரு படி வாங்கித் தந்துவிட வேண்டும் என்று உறுதிமொழி கொடுத்திருந்தாரே அஃது என்னயிற்று?

இத்திட்டம் வெளிவருமுன், திருவாளர்கள்: வை. சொக்கப்பா, தமிழ்க்குடிமகன், சேலம் சின்னண்டார், செங்கை செந்தமிழ்கிழார் ஆகியோருடன் நான், அன்றைய அமைச்சர் மாதவன் அவர்களைப் பார்த்து மூன்று மணி நேரம் செ. சொ. பி. அகரமுதலி பற்றிப்பேசி, அன்றைய கலைஞர் ஆட்சியிடம் உதவி கோரியதும்; பின்னர், நான் 1974 ஆம் ஆண்டு சிங்கை, மலேசியச் செலவு மேற்கொண்டிருந்த பொழுது, தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் அழுத்தமான இடைவிடாத முயற்சியால், கலைஞர் அவர்கள் அந் திட்டத்தை அரசின் திட்டமாக அறிவித்து, அதற்கொரு தனித்துறையே வகுத்துக் கொடுத்தாரே, அதுவும், திரு. மதிவாணன் அவர்கள் தம் பதிப்புரையுள் எழுதிய "அகரமுதலித் திட்டத்தின் தோற்றம்" என்னும் தலைப்பின்கீழ் அடங்காவோ? திரு. மதிவாணன் ஒருவரே, அல்லது அமைச்சர் திரு. அரங்கநாயகமும் சேர்ந்த இருவரே, அல்லது முதலமைச்சர் ம. கோ. இராமச்சந்திரனுர் அடங்கிய மூவரே இவ்வகர முதலி வெளி வருவதற்குத் துணை நின்றுவிட்டார்களோ? என்னே இவர்களின் வரலாற்று மறைப்பு! வஞ்சித் தொழுகும் மெய்யறுப்பு!

அகர முதலியுள் வண்ணப் படங்கள் வெளியிட அரசு இசைவளித்ததும், ('செந்தமிழ்ச் செல்வி' ஏப்-85), பாட நூல் பதிப்

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

0: 1072: அன்பிற்கும், ஈகத்திற்கும் சான்றாய் இலங்கும் கழக முதல்வர் பாவலரேறு அய்யா அவர்கட்குச் சிறையாளி சி. முத்துக்குமாரசாமி வரைந்திடும் அன்பு மடல்! நமது இயக்கக் குறிக்கோள் நிறைவேறிடும் நாள்வரையும், மேலும், தாங்கள் நலமுடன் வாழ்நாள் பெற்றிட வேண்டி இயற்கையை வேண்டுகின்றேன்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய நமது தமிழின அரண்கள் எனும் இதழ்கள் கிடைக்கப்பெற்றேன்.

இதழ் எண்—52, தமிழ்நிலத்தில் தங்களின் 'நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்' செய்திகளும், 'தவிர்க்கவியலா அச்சுப்

பாசிரியர்கள் துணையும்; 'பொன்மனச் செம்மலும்(!), புரட்சித் தலைவ(!)ரும்' நன்றி கூறுதற்குரியவர்களாக இருக்கையில்' பாவாணர் திட்ட உறுப்பினர்களுட்பட, அதற்காகத் தொடக்கத்தில் அடிக்கல் நாட்டியவர்களெல்லாரும், நன்றிக்கும் உரியவர்களல்லாமல் போய்விட்டார்களோ? என்னே, கண்ணுக்கு முன்னாக நடந்த கல் போன்ற உண்மையினை, இவர்கள் மூடி மறைக்கும் கரவான தன்மை? தென்மொழியில் தேடிப்பிடித்து வெளியிட்ட அண்ணா மடலின் படப்படியை அகரமுதலியில் பெரிதுபடுத்தி வெளியிட்டார்களே, அதற்கடியிலேனும் அஃது எங்கிருந்து எடுக்கப் பெற்றது என்று வெளியிட மனம் வரவில்லையா? அல்லது தென்மொழி வெளியிட்ட பாவாணர் படத்தைப் பயன்படுத்திக் கொண்டார்களே, அதற்கேனும் நன்றி தெரிவிக்க வேண்டாமா? இவ் வகர முதலியை இத்துணை வரலாற்று மறைப்புடனும், தந்நல வெறியுடனும், பொறாமையுணர்வுடனும் நன்றியறிவற்ற தன்மையுடனும் வெளிக் கொணர்ந்த அரசையும், அதற்கு இசைந்து தம் உடல் வளர்க்கும் இயக்குநரையும் மிகுவாகக் கண்டிக்கிறோம். கலைஞர் கருணாநிதி அவர்கள், அகரமுதலித் திட்டத்தை அன்று அரசுத் திட்டமாக அறிவிக்காமலிருந்தால், இன்றைக்கு, இந்நூலை வெளிக் கொணரும் பெருமையும், வாய்ப்பும் இவ்வரசுக்கும், இயக்குநர் மதிவாணனுக்கும் கிடைத்திருக்குமா என்பதை எண்ணிப் பார்க்கவும். ஆனால், அப்பொழுதும் அகரமுதலி மட்டும் கட்டாயம் இப்பொழுது வெளிவந்ததைவிட, எல்லா நிலைகளிலும் மிகவும் சிறப்பாகவும், விரிவாகவும், ஏன் நிறைவாகவும் வெளிவந்திருக்கும் என்று தெரிவிக்க விரும்புகின்றோம். எவ்வாறேனும், தொடக்கத்தில், அகர முதலி வெளியீட்டைக் கலைஞர் அரசு மேற்கொண்டபின், அவரை வாழ்த்தி எழுதிய 'கலைஞர் வாழ்ந்தார்' என்னும் தென்மொழி (சுவடி ,11 ஓலை-10-11) ஆசிரியவுரை ஒன்றே வரலாற்றில் உண்மையை நிலை நாட்டப் போதுமே! ஒரு கருத்தோ செயலோ வளர்ச்சியடைந்தபின், அரசோ, அதிகாரிகளோ, அதன் பயனைப் பங்கிட்டுக்கொள்ளும் இழி தகைமைக்குப் பெயர்தான் வரலாறோ? நெஞ்சு குமுறுகிறோம் நாம்! காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது!

— பெருஞ்சித்திரனார்

Scanned with CamScanner

பிழைகள்' செய்திகளும் என்னைப் பெரிதும் கவலையில் ஆழ்த்தவே செய்தன.

எதிர்கால நம் இன வழித்தோன்றல்களின் நலனுக்கு நம்மை நாமே ஒப்புக்கொடுக்க வேண்டியுள்ளது. தலைசிறந்த பணியை ஆற்றுவதையே கழிபேருவகைகொண்ட தங்களின் வழிகாட்டுதலின் கீழ் தமிழ் இளைஞர்கள் அழைப்பின்றியே பணியாற்றிட வந்திடுவர் என்பது உறுதியே! ஆனாலும் நாம் அதற்கான வினைகளை ஆற்றக் கடமைப்பட்டவர்கள்.

தங்களின் கடந்தகால வாழ்நிலைபற்றி சிறிதே அறிந்திருந்த எனக்குத் தமிழ்நிலம் வாயிலாக மீண்டும் சற்று விரிவான செய்திகளை அறியும் நிலை பெற்றமைக்கு மகிழ்வதுடன் தங்களின் நேர்மையான காலடிச்சுவடுகள் எனும் வாழ்நிலையை அனைவரும் பின்பற்றியே தீருவர். கரணியம் உண்மைகள் ஒருபோதும் ஒரு வட்டத்திற்குள்ளேயே நின்றுவிடுவதல்ல! அதுபோல நேர்மை, உண்மை, மற்றும் இன்ன பிற கருத்துகளைத் தாங்கள் கூறுவது இன்று பலருக்கும் கசக்கும் வேம்பாக இருக்கலாம். காலவளர்ச்சியில் பிணி தீர்க்கும் அருமருந்து கசப்பே என உணர்ந்து நம் கருத்துகளை ஒப்புக் கொள்வர்.

'நமது இயக்க இதழ்கள் உரவோர் உள்ளங்களில் தனி
மாந்தச் சிந்தனையை மட்டும் வளர்ப்பதில்லை! மாறாக ஒவ்வொருவர்
உள்ளத்திலும் குமுகாயத்தையே வளர்க்கின்றன".
யான் விரைவில் விடுதலை பெறப்போவது உறுதியே! வழக்
குரைஞர் விரைவில் வழக்கை முடிப்பதாகக் கூறி உள்ளார்.
தங்களின் அறிவுரையைப்போல் யான் விடுதலையடைவதே
முதன் வேலை! பின்னர் தங்களுடன் தொடர்பு கொண்டு நேரில்
நம் இயக்கக் குறிக்கோள் வெற்றி பெற்றிட அனைத்து வகைகளி
லும் உடலுழைப்பாலும், ஈகப்பணிகட்கும் என்னை முழு நேரப்
பணியாளனாக ஆட்படுத்திக் கொள்வேன்!

யான் எதிர்நோக்குவது நம் இயக்கக் குறிக்கோள் எய்தப் பெற்று, நம் இன வழித் தோன்றல்கள் பீடுடன் வாழ வழி செய்வதையே!

இன்று வானொலி நிலையங்களும், பல்கலைக்கழகங்களும் ஒரு
சார்புத்தன்மையுடன் செயல்படுவது எனின் மிகையாகாது.
அருவருப்புத் திரைப்படங்களையும், சீர்கெட்ட கலை வளர்க்கும்
ஏடுகளையும் அழித்திடல்வரை மீளாது நம் இனம்! நம் இன, மொழி,
கலை, இலக்கியம், பண்பாடு, யாவும் தனித்தன்மையுடன் என்றும்
நின்று நிலவ நாம் போராடித் தனித்தமிழ்நாடு அடைந்தே
தீருவோம்! தமிழக மக்கள் சமனிலைக் குடியரசு (People's Socialist
Republic of Tamil Nadu) மலர்ந்தே தீரும்!

முதன்மையாக தமிழீழம்! அதன்வழியாக தனித்தமிழ்நாடு!
'தமிழர் இனி இழக்கப்பொறுமை ஒன்றே உளது! அதை இழந்து
தான் நாம் தனித் தமிழ்நாடு அடைய முடியும்! அடைவோம்
உறுதியாக!

அன்புள்ள, கழகப் பணியாளன்,
சீ. முத்துக்குமாரசாமி, திருச்சி-20.

பொன்னும் முத்தும்!

வெங்கா லூர்எனும் வியன்பெயர் சொன்னதும்
பொங்கும் அன்பின் **பொற்செழி யன்**எனும்
குளிர்ந்த முகமும், குறைவிலா அன்பின்
தளிர்நகை **நெடுஞ்சேர லாதன்** என்னும்
முத்துவின் முகமும், முழுநில வுகளாய்,
ஒத்தவா றென்றன் உள்ளத்து வானில்
நீந்தி ஒளிதரும்! நினைவிலும் துணைவரும்!
காந்தியென் உள்ளக் கருத்தினை வளர்க்கும்!

அற்றைநாள் தொடங்கி இற்றைநாள் வரையிலும்
ஒற்றைஓர் இம்மியும் ஒதுங்கிடா தென்னைப்
பற்றிப் படருமிப் பச்சைக் கொடிகளில்
உற்றவை அன்பெனும் உயர்மணப் பூக்களே!

கள்ளமும் கவடும் கயமையும் நிறைந்தே
உள்ளம் ஒளித்தே உலாவரும் உலகில்,
வெள்ளப் பெருக்கென அன்பினால் விரிந்து,
கொள்ளை கொள்ளையாய்த் தமிழ்ப்பயிர் கொழிக்க—
ஒவ்வோ ராண்டும் ஓடோடி வந்தே
எவ்வொரு தயக்கமும் இன்றி, இருகையால்—
எனக்குப் பிறந்தநாள் எனநினை வூட்டி—
மனக்கனி வோடும், மகிழ்முகத் தோடும்,
கண்களும் வாய்களும் கன்னக் கனிகளும்
ஒண்சுடர் ஒளிக்கதிர் உமிழ,அன் பொழுக—
கைகள் வழிந்திட ஈயும் கனிவினை,
மெய்யோ டுயிர்கலந் திருக்கும் வரையிலும்,
உயிரணுத் திரள்கள் உள்ளொளி காழ்த்தே
உயிர்ப்பே ரொளியோ டொன்றும் வரையிலும்—
மறப்பேன் கொல்லோ! மாண்பினர் அன்பைத்
துறப்பேன் கொல்லோ!
—தொன்தமிழ் வளர்க்கையில்
பொய்யரும் புளுகரும் புன்மைக் கயவரும்
வெய்ய பழியும் இழிவும் வீசலால்
புண்ணாகி நெஞ்சம் புலம்பிடும் பொழுதில்
கண்ணாகி என்றனைக் காத்திடும் அவர்திறம்
அன்னை அன்பினும் அத்தன் காப்பினும்
பன்னூறு மடங்காய்ப் பயிலுவ தன்றோ?

பொன்னும் முத்துமாய் ஒன்றிப் பொலிந்திடும்
இன்னரும் நட்பின் இருவரும், எந்தமிழ்
ஒளிர்வது போலும் ஒளிர்ந்து,
மிளிர்வதும் மெய்யே, மேன்மேலும் உயர்ந்தே!



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ருகூ

மலைமென் னெஞ்சே! மருட்கை யதுவே!
குலையுங் குடரும் விதுப்புற் றனவே!
தமிழ்தோய் உளத்துத் துணிவீ தென்கோ
வேந்துமுன் ஒச்சிய விறலீ தென்கோ
வளமான் தோன்றல் இளமை என்கோ
அலைபுலை கொற்றத்து விளைவீ தென்கோ
உலைவூங் குயிரின் உவகை என்கோ
ஆடுநெய் யொழுக முச்சியி னப்பிப்
பாடுவெள் ளருவி பாய்தல் போலும்
கன்னெய் முழுகிக் கனல்புகுந் தாடிய
செஞ்சிக் கோட்டத்துத் தேவனூர்ச் செம்மல்
பொய்யுடல் கருகிப் புறமாறி,
மெய்யுடற் கொண்டு மிளிர்ந்த செயலே!

பொழிப்புரை : திகைக்கும் என் நெஞ்சம்! வியப்புக்குரியது அது! நெஞ்சாங்குலையும் குடலும் நடுக்கமுற்றன. தமிழ் உணர்வு தோய்ந்த உள்ளத்தின் துணிவு, இஃது என்று சொல்லுவமா? அரசின் முன் ஓங்கி நின்ற வெற்றிச் செயல் இஃது என்று சொல்லுவமா? பெருமைக்குரிய குடியில் பிறந்த ஒருவனின் இளமைச் செயல் என்று சொல்லுவமா? துன்புறுத்தலும் புன்மைச் செயல்களும் உடைய அரசின் அடிப்படையில் விளைந்த செயல் இஃது என்று சொல்லுவமா? துன்புற்ற உயிரின் விடுதலை மகிழ்ச்சி என்று சொல்லுவமா? ஆட்டிய எள் நெய்யை, வழிந்து ஒழுகும்படி, தலையின் உச்சியில் தேய்த்துக்கொண்டு, இசைக்கின்ற வெள்ளிய அருவியில் பாய்தல் போலும், கன்னெய்யை (பெட்ரோலை) உடல் முழுதும் ஊற்றிக்கொண்டு, நெருப்பில் குளித்து ஆடிய, செஞ்சிக் கோட்டத்துள்ள தேவனூரைச் சேர்ந்த வீரன், கோடம்பாக்கத்தின் முச்சந்தியில், தன் பொய்யுடலைக் கருக்கிக் கொண்டு, உயிர் வெளியேறி, மெய்யான புகழுடலை வாழ்விடமாகக் கொண்டு, ஒளியாய் விளங்கி நின்ற செயலே!

விரிப்பு : இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

இதுவும் முந்தைய பாடல் காலத்து நடந்த வியப்புக்குரிய ஒரு செயலைப் பாராட்டியதாகும்.

Scanned with CamScanner

செஞ்சிக் கோட்டத்துத் தேவனூர்ச் செம்மல் சிவலிங்கம் என்னும் இளையோன், வடவராட்சியின் இந்தித் திணிப்பைக் கடிந்து, கோடம்பாக்கத்துக் கூடல் மறுகில், எண்ணெய் யூட்டி எரிபுகுந்து துஞ்சிய செயலை மருட்கையுறப் பாடியதாகும், இது.

'மெய்யுடற்கொண்டு மிளிர்ந்த செயலே, மருட்கையதுவே, மலைமென் னெஞ்சே' என்று இறுதியும் தலையும் இணைத்துப் பொருள் கொள்க.

மலம் — மலையும் என்பது இடைக் குறைந்தது. —திகைக்கும்.

இஃது உண்மைகொல் என்று திகைத்தது நெஞ்சம்!

மருட்கை — வியப்பு! அது மிளிர்ந்த அச் செயல்.

குலை — நெஞ்சாங்குலை; குடர்—குடல்— கடைப்போலி.

விதுப்புறுதல் : நடுக்குறுதல்.

தமிழ்தோய் உளத்துத் துணிவு : தமிழ் உணர்வு தானே வந்து பொருந்திய உள்ளத்தில் தோன்றிய துணிவு. என்னே? தமிழில் தான் தோய்தலும், தன்னில் தமிழ்வந்து தோய்தலும் ஆகிய இரண்டு வினைகளுள், முன்னது மகிழ்வுறுதலும், பின்னது துணிவுறுதலும் ஆம் என்க.

வேந்து முன் : அரசின் முன்னம்.

ஓச்சிய விறல் : ஓங்கி நின்ற வெற்றிச் செயல்.

வளமான் தோன்றல் : வளப்பமான குடியில் தோன்றியவன். இவ்விடத்து வளப்பம் பெருமையைக் குறித்தது.

இளமை என்கோ : இளமையின் துணிவான செயல் என்பமா?

அலைபுலை கொற்றம் : மக்களை அலைத்தலும் புன் செயல்களைச் செய்தலும் ஆகிய அரசு. கொல்லுதல் உரிமையால் கொற்றம் ஆயிற்று. வெல்லுதல் நிலை வெற்றி ஆனதுபோல. அரசு மக்கள் உயிரைக் கொல்லும் உரிமைபெற்றது. அரசு என்னும் சொல்லும், அரைசு—அழித்தல் நிலைப் பொருளைக் கொண்டதே. இனி, ஆள் என்னும் வேரடியால் ஆட்சியும், மன் (நிலைபேறு,வலிமை) என்னும் வேரடியால் மன்னனும் வருதல் காண்க. வேய்தல் (முடியணிதல்) பற்றி வேய்ந்தன்—வேந்தன்—வேந்து-எனவும் வருதல் வரலாற்றுப் படிநிலை வளர்ச்சி நிலையைக் குறிக்கும் சொல்.

உலைவு ஊங்கு உயிர் : துன்புற்று நீங்கும் உயிர்.

முச்சி — தலை உச்சி

அப்புதல் — வாரிப் பொதிதல்; கையால் தேய்த்தல்.

கூடல் மறுகு —ஒன்றுக்கு மேற்பட்ட தெருக்கள் இணையும் இடம். — முச்சந்தி — நாற்சந்தி ஆகிய இடம்.

பொய்யுடல் — இருந்து, இல்லையாகிவிடும் உடல். பொய்த்தல்- இல்லை என்றுதல்.

புறம் மாறி — ஒரிடத்திலின்று வேறு இடத்திற்கு மாறிப்போதல்

Scanned with CamScanner

மெய்யுடல் — இருக்கும் உடல் — புகழுடல்.

உயிரானது இருந்த உடலினின்று கழன்று, என்றும் இருக்கும் புகழ் உடலில் புகுதல்.

புகு — புகல் (நுழைதல், சொல்லுதல்) — புகழ். உயிர் உடல் மறைவுக்குப்பின், நுழைந்து வாழும் உடல். என்றும் புகன்று கொண்டிருப்பதற்கு உரிய தன்மையானும், புகுந்து வாழும் தன்மையானும், புகல் என்னும் சொல் உயர்வு சிறப் பெய்திப் புகழ் என்னும் நிலைச்சிறப்புச் சொல்லாய்த் திரிந்தது. வினைச்சிறப்பு நிலைபற்றி, எழுத்துச் சிறப்புப் பேறு பெற்று, நிலைத்த சொல்லானது. சொற்கள் தம் தம் வினைகளுக்குரிய முறையில் உருமாறுதல் சொற்பிறப்பியல் கோட்பாட்டில் ஒரு வகை என்க.

மிளர்தல் : மின்னுதல், ஒளிர்தல். மின் என்னும் வேரடியாகப் பிறந்த சொல்.

கடந்த 1965-ஆம் ஆண்டு நடந்த இந்திஎதிர்ப்புப் போராட் டத்தைப் பற்றியெழுந்த பாடல்களில் இதுவும் ஒன்று.

முந்தைய பாடல்களில் முழுவரலாற்றையும் கண்டுகொள்க.

தமிழ் உணர்வு முற்றிய உள்ளத்தின் துணிவையும், அலைபுலை கொற்றத்து விளைவையும், உயிரின் காழ்ப்புத் தன்மையில் அது தன்னை இடம் பெயர்த்துக்கொள்ளும் வலிவையும், கொள்கைக் கென உயிர்பெயர்தல் உவகை தருவது என்னும் உயிர் முதிர்ச்சித் தன்மையையும் இப் பாடலுள் கண்டுகொள்க.

இப் பாடல் முன்னது திணையும், கன்னெய் ஆடல் என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன.

தமிழுக்கு ஒரு கோடி!

இந்திக்கு நூறு கோடி!

சென்னைத் தொலைக்காட்சியில் இரவு 9-20 மணிக்குப் பகர மாக 8-30 மணிக்கே இப்பொழுது தேசிய நிகழ்ச்சிகள் என்ற போர்வையில் இந்தி நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

தமிழினக் காவலர்களின் இந்தி எதிர்ப்பெல்லாம் ஒப்போலைக் கான சடங்கு என்பது நடுவணரசுக்குத் தெரியும். அதனால்தான் பொருள் ஒதுக்கீட்டில் தமிழுக்கு ஒரு கோடி உருபாவும், இந்தி மொழிக்கு நூறு கோடி உருபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது.

—நன்றி: 'மன ஓசை' ஏப்-85.

தமிழனின் தனிப்பண்பு!

— வீ. வில்வநாதன்

இலக்கியத்தில் பொதிந்துள்ள கருத்துத் தேனை
எல்லோரும் சுவைத்திடட்டும் என்றே எண்ணிப்
பலநூறு பணந்திரட்டி அறிஞர் தம்மைப்
பரிவுடனே வரவழைத்துப் பேச வைத்தால்,
தலைகாட்ட ஒருவருமங் கில்லை; ஆனால்
சங்குளத்துத் தமிழரின்றோ, திரைப்ப டத்துக்
கலைஞரினைக் காணுதற்குப் பறத்தல் போன்று
கருத்துக்கு மதிப்பளித்தல் எந்த நாளோ?

யாரோடும் வீண்வம்பு செய்தி டாமல்
யாவரும்நம் இனத்தவரே என்றே எண்ணிச்
சீரோடு வாழ்கின்ற தமிழி னத்தைச்
சிற்றெறும்பும் பிடிக்காத இலங்கை நாட்டில்
வேரோடு மாய்க்கின்ற நிலையை மாற்ற
வேண்டினாலும் ஒருகாசும் ஈயார்; ஆனால்
ஊரோடு திருவிழாப்போல் படத்தைப் பார்க்க
உருண்டோடல் தமிழினம்போல் எதுவும் இல்லை.

பலசாதிப் பெயர்சொல்லிப் பிரிந்து வாழ்வார்;
பகுத்தறிவு வழிநடக்க விரும்ப மாட்டார்;
பலகட்சி ஏற்படுத்திப் பெருமை கொள்வார்;
பாரினிலே தமிழினந்தான் உயர்ந்த தென்பார்;
நலமில்லை நமக்கென்றே அறிந்தி டாமல்
நடிகனுக்காய்த் தீக்குளிப்பார்; ஆனால் நாளும்
கொலைசெய்து நம்மினத்தைக் குவிக்கக் கண்டும்
கூடியொன்றாய்ச் சேரஏனோ உள்ளம் இல்லை?

பெற்றவரைக் கட்டிவிட்டு மகளைக் கண்முன்
பிரம்படியால் உணர்விழக்கச் செய்து விட்டுக்
கற்பழித்து மெய்ப்பசியைத் தீர்த்துக் கொள்ளும்
கயவனான சிங்களத்தான் திட்டம் போட்டு
நற்றமிழர் இனமறவே மடியு மாறு
நாளெல்லாம் கொலைபுரிதல் கண்ட பின்னும்
சற்றுமிங்கே சுரணையின்று வாழும் இந்தத்
தமிழ்மக்கள் உணர்வுபெற்றே எழும்நாள் என்றோ?

கவினுலகில் தமிழ்மகளாய்ப் பிறந்த தாலே
கவின்மேனி மறைத்துள்ள ஆடை தன்னை
அவிழ்த்துவிட்டுப் பிறந்தஉருச் செய்து, தீயோன்
அளவின்றி மகிழ்வுறுதல் கேட்ட பின்னும்
செவிடனைப்போல் வாழ்வதற்கும், இறைவ னைப்போல்
திரைக்கூத்தர் படம்வைத்துத் தொழுவ தற்கும்
தமிழகம்போல் எங்குமில்லை; இதற்கா சொன்னார்—
தனிப்பண்பு தமிழனுக்கே உள்ள தென்றே?

இட்லரின் கொடுமையாளர்கள் இன்னும் வாழ்கின்றனர்!

— ஏ. எசு. மூர்த்தி

அவன் பெயர் சோசப் மெங்கெல். அவன் ஒரு மருத்துவன். இட்லரின் நம்பிக்கைக்குரியவன் மருத்துவர்கள் பொதுவாக நோயாளிகளுக்குப் பண்டுவம் பார்ப்பவர்கள். ஆனால் மெங்கெல் அப்படியல்லன். வெளிப்படையாகக் கொலை செய்வதில் கை தேர்ந்தவன். இட்லரது பெயர்போன ஆசுவிதசு உறுப்புச்சிதைவு (சித்திரவதை)ப் பாசறைப் பொறுப்பாளி. அங்குள்ள நச்சுவளிக் கூடங்களில் 4,00,000-க்குக் குறையாது, யூதர்களையும், செர்மன் இனத்தைச் சேராதவர்களையும் கொன்று குவித்தவன்.

ஆனாலும், கொலை செய்வது மட்டுமே அவன் தொழில் அன்று. 'ஆராய்ச்சியாளன்' என்ற பொறுப்பும் அவனுக்குத் தரப்பட்டிருந்தது. செர்மானிய இனத்தைச் சேராத, பிற இன மக்களனைவரும் எப்படித் தாழ்வானவர்கள் என்பதை அவன் ஆராய்ச்சிகள் மூலமாக மெய்ப்பிக்கவும், இட்லருக்குக் கடமைப்பட்டவன். அவன் உடலெல்லாம் பரவி நின்ற ஒரே ஒரு தன்மை அவனது கொடுமைதான்! மாந்தர்களின் உறுப்புகளில் ஒவ்வொன்றாக வெட்டி எடுத்து, அவர்கள் எவ்வகையில் எதிர்வினை புரிகின்றனர் என்பதை ஆர்வத்துடன் ஆராய்வான் அவன். பல்வேறு வேதியல் பொருள்களை மாந்த உடல்களில் செலுத்துவது; பல நச்சுயிரிகளையும் அவரின் உடல்களில் ஊசி மூலம் புகுத்துவதும், அவனது மனம்போன போக்கில் மாந்த உறுப்புகளை வெட்டி எடுத்து, அவற்றிலுள்ள தசையிழை (திசுக்)களை ஆராய்வதும் போன்ற ஆய்வுகளை அவன் செய்து வந்தான்; அவனது பரிசோதனைக்கூடச் சுவர்கள் முழுவதிலும், மக்கள் கண்கள் பதிக்கப்பட்டிருந்தன; அவன் ஆய்வுகளுக்கு ஆளானோரின் கண்கள் அவை.

ரூத் இலியாசு என்ற யூதப் பெண் ஒருநாள் அவன் முன்னால் நிறுத்தப்பட்டாள். அவள் தாய்மையுற்றிருந்தாள். அதுகேட்டு, மெங்கெல் கொதிப்படைந்த போதும், அவள் குழந்தை பெறுவிப்பதை அவன் அனுமதித்து விட்டான். குழந்தை பிறந்ததும், அந்தத் தாயின் மார்புக் காம்புகளைப், பசையினால் ஒட்டி விட்டுக் குழந்தை பால் குடிக்காதவாறு செய்தான். பாலின்றி அந்தக் குழந்தை எத்தனை நாள்களில் இறக்கும் என்று அவன் தெரிந்து கொள்ள விரும்பினான். தாயும், குழந்தையும் பட்ட தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. குழந்தையின் உயிர்த் துன்பத்தைக் காண முடியாத, அந்தத் தாய் தான் பெற்ற மகவையே கொன்று விட்டாள்.

இரட்டையர்கள் மற்றும் குள்ளர்கள் என்றால் அந்த மருத்துவருக்கு ஒரே கொண்டாட்டம். அவர்கள் பற்றிய ஆராய்ச்சியில் அவன் 'தனித் தேர்ச்சி' பெறவிரும்பினான்.

ஒருமுறை ஏழு குள்ளர்கள், மூன்று இயல்பான மாந்தர்களைக் கொண்டதொரு உருமேனியக் குடும்பம் உயிர்ச்சிதைவுப் பாசறைக்கு வந்து சேர்ந்தது. அந்தக் கொடியவனுக்கு ஒரே

மகிழ்ச்சி, ஒரு நாளிரவு அவன் ஒரு களி விருந்துக்கு ஏற்பாடு செய்தான், தங்களைத் துன்புறுத்துபவர்களுக்கும், இரையாகப் போகிறவர்கள் கலை விருந்தளிக்க வேண்டுமல்லவா? அந்தக் குடும்பத்தினர் அனைவரும் அம்மணம் ஆக்கப்பட்டு, மேடைக்கு கொண்டு வரப்பட்டனர். 2000 நாசிச அதிகாரிகளும், படைத் துறையினரும்தாம் பார்வையாளர்கள் அவர்களில் முன் வரிசையில் அமர்ந்திருந்தவர் இட்லரின் முகாமைப் புள்ளிகளில் ஒருவரான எய்ன்ரிச் இம்லர். அவர் தமது திரைப்படப் பிடிப்பானில் படமெடுத்துச் சுவைத்தார். மெங்கெல்தான் 'கலை' விழாவின் இயக்குநர்.

அவன் ஒரு மாந்த விலங்கு என்று கூறினல், விலங்குகளுக்கு அஃது இழுக்கு. ஏனெனில் பசித்தால் மட்டுமே விலங்குகள் இரை தேடுகின்றன. மேலும் அவன் ஒரு போர்க் குற்றவாளி, போருக்குப் பின்னர் அவன் பிடிபட்டு, நியூரம்பர்க் உசாவலின் போது தண்டிக்கப்பட்டிருப்பான் என்றே எவரும் கருதக் கூடும்.

அதுதான் இல்லை.

மெங்கெல் புரிந்தகொடுமைகளை எல்லாம் விளக்கி உரைத்துள்ள அமெரிக்க 'நியூசுவீக்' செய்தியிதழ் தரும் செய்தியின்படி, போருக்குப் பின்னர் மெங்கெல் பிடிபடாமல் தப்பித்து விட்டான். எப்படி அவன் தப்பினன் என்பது பலருக்கும் பெரும் புதிராக இருந்தது. வியனவில் 1947-இல் அவன் தளை செய்யப்பட்டதற்கான தடயங்கள் அமெரிக்கப் படைத்துறை உளவு ஆவணப் பதிவுகளிலிருந்து கிடைத்துள்ளன. ஆனல், அதன் பிறகு அவன் எப்படி விடுதலையானன் என்பது மருமமாக உள்ளது.

நாசிச கொடியவர்களில் பலர், அமெரிக்க உளவுத் துறையைச் சேர்ந்தோருடன் பேரம்பேசி, தண்டனையிலிருந்து தப்பி, அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழத் தொடங்கினர் என்ற உண்மை பலருக்கும் தெரிந்திருக்கும். நாசிசக் கொடுங்கோளர்களுக்கு தஞ்சம் அளிப்பது, அமெரிக்கப் படையினருக்கும் வருங்காலத்தில் பயன்படும் என்று அவர்கள் எண்ணியிருக்கக்கூடும்; ஏனெனில் இரண்டாவது உலகப்போர் முடிவில் மாந்த அறமுறையிலும், உளவியல் முறையிலும், சோவியத்து ஒன்றியத்துக்கெதிராகப் போர் தொடுக்கும் ஆசையைக் கைவிட்டு விடவில்லை.

பாசிசர்களை எதிர்த்து அமெரிக்கர்கள் நேய தேசத்தினருடன் சேர்ந்து போரிட்டனர் என்பது உண்மையே; ஆனாலும் அமெரிக்கத் தலைவர்களின் பாசிச-எதிர்ப்பு மேம்போக்கானது; உதட்டளவிலானது; ஆழமானதன்று; முழுமையானது அன்று.

இல்லையெனில், ட்ருமன், அமெரிக்கக் குடியரசுத் தலைவராவ
தற்கு முன்பு, இரண்டாம் உலகப்போரின் போது, உருசியர்கள்
தோற்பது போலிருந்தால், நாம் செர்மானியர்களுக்கும், செர்மா
னியர்கள் தோற்பது போலிருந்தால், உருசியர்களுக்கும் ஆதரவு
தர வேண்டும்' என்று கூறியிருக்க மாட்டார்.

அதனால்தான், பல நாசிசக் குற்றவாளிகளை அவர்கள் தப்பிக்க உதவினர்.

துங்கபுரம் [திருச்சி] அரசு உயர்நிலைப் பள்ளி நடத்திய இலக்கிய மன்ற நிறைவு விழாவிற்கு 23-3-85 வருகை தந்த

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு

அப் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மாணவர்கள் படித்தளித்த வரவேற்புப் பாடல்!

திருமிகு நல்லீர்! தீந்தமிழ்ச் செல்வ!
அருளுளங் கொண்ட ஆண்மைச் சீயமே!
செந்தமிழ் செழிக்கத் தொண்டு புரிவோய்!
தமிழ்த்துயர் அறிந்து தணலாய்க் கொதிப்போய்!
தமிழர் நிலைக்கு தண்ணளி கொண்டோய்!
தமிழ்ச்சிட் டாய்நீர் தந்நலம் மறந்து,
தென்மொழி தழைக்கத் தீம்பணி யாற்றிட
அரும்பணி ஏற்ற அறிவுசால் ஆன்றோய்!

தமிழும் தமிழரும் தலைநிமிர்ந் திடவே
தந்துயர் காணுத் தகைமைத் தமிழே!
உலகத் தமிழர் ஓங்கி உயர்ந்திட
உயர்பணி உடற்றிடும் ஒய்விலாத் தமிழரே!

தமிழர் வாழ்வின் தளர்வு நீங்கிட
விடுதலை என்றே விடிவெள்ளி யாமென
அலைகடல் கடந்த அருந்தமிழ் மக்கள்
நிலைதனை உணர்ந்து நீவிர் உகுத்த
செந்நீர் அன்றோ செம்புல மாயது!
செந்நாப் புலவீர்! செஞ்சொற் கொண்டலே!

உயிருந் தமிழாய், உடலுந் தமிழாய்,
தமிழின் பிழம்பாய்த் திகழ்ந்திடுஞ் சுடரே!
உன்றன் சொல்லும் செயலும் கண்டும்
உணர்ந்தும் இருக்கும் உணர்வுடை யாங்கள்
உவந்து அழைத்தோம் உவந்து வந்தீர்!
உங்கள் வருகையால் உவந்த நாங்கள்
வருக வாழ்கென வாழ்த்தி ஏத்த
வருக நன்றே! வாழ்க நன்றே!

இன்னணம்,
தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள்,

(முன் பக்கத் தொடர்ச்சி)

மறந்துவிட வேண்டாம்! அந்த அரக்கன் மெங்கெல் இன்னும் உயிருடன் இருக்கிறான். 1985 பிப்ரவரி மாத நடுவில்கூட, இலண்டனிலிருந்து வெளிவரும் 'சண்டே டைம்சு' இதழ், எட்டு மாதங்களுக்கு முன்னர், பராகுவே நாட்டில் மெங்கெலைப் பார்த்ததாகக் கூறிற்று. இலத்தீன் அமெரிக்காவிலேயே கொடிய அனைத்ததிகார (சர்வாதிகார) ஆட்சி நடைபெறும் நாடு பராகுவே. அதைச் சென்ற பல்லாண்டுகளாக ஆண்டு வருபவன் வாசிங்டனின் செல்லப் பிள்ளையான செனரல் இசுடிரோய்னர்.

40 ஆண்டுகளுக்கு முன்னர் நாசிசம் முறியடிக்கப்பட்டது; எனினும் நாசி அரக்கர்கள் இன்னும் வாழ்கின்றனர். 0

விடுதலை நாடு!

கடலூர், **ப. மணிமாறன்**

புலம்பித் திரிவாய்! புலமை விழையாய்!
புழுங்கி நாளும் மாய்வாய்!
கலங்கிச் சோர்வாய்! கயமை சேர்ப்பாய்!
கண்ணீர் வடித்தே ஓய்வாய்!

உருப்படி யாக ஒன்றும் செய்யாய்!
ஒன்றை நூறாய்த் திரிப்பாய்!
தருக்கி யலைவாய்! தகுதி இழப்பாய்!
தமிழை அழிப்பாய் நெருப்பாய்!

கொள்கைக் குன்றெனக் குரைப்பாய்! பிறர்முன்
கூனிக் குறுகிக் கிடப்பாய்!
உள்ளும் புறமும் கள்ளம் வழிந்திட
ஒப்பனை செய்தே நடிப்பாய்!

புகழை நாடிப் பொழுதும் ஏங்கிப்
புழுவாய் நெளிந்து புரள்வாய்!
இகழை எதிர்ப்பைத் தாக்கிடாக் கோழையாய்
எதற்கும் அஞ்சி மருள்வாய்!

இனத்தின் காவலன் என்பாய்! ஏய்ப்பாய்!
இதுவரை என்ன கிழித்தாய்?
மனத்தின் போக்கில் மயக்கில் ஆழ்ந்தே
மாந்த நேயம் ஒழித்தாய்!

மடமை கொடிதாம்! மானம் பெரிதாம்!
மகிழ்வுடன் விடுதலை நாடு!
கடமை உணர்வுடன் களம்பல கண்டு
கவின்புகழ் பெறுவது பீடு!

மொழியை இனத்தை நாட்டை மீட்டிட
முழங்கிடு! எடு நீ வாளை!
பழியைத் துடைத்திடு! பகையை வீழ்த்திடு!
பாரே வாழ்த்தும் நாளை!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள்
அடங்கிய, கிழமை இதழ்

1.	தனியிதழ்	விலை உரு.	0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு.	36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு.	18. 00

தொடர்புக்கு: தமிழ் நிலம் 5, அருணாசலத் தெரு. சென்னை 5.

தொடர்ச்சி - 3 — நாடகம்

விதியும் மதியும்

நாடக ஆசிரியர்: அதியமான்

இளங் : அமைச்சர் அவர்களே, இப்போது நான் அப்பாவோடு பேசவில்லை. அரசனோடு பேசுகிறேன். நான் ஒரு துறவி. இமயத்தை வென்ற நெடுஞ்சேரலாதனின் குடிமக்களில் ஒருவன்.

படைத்தலை : (குறிஞனைப் பார்த்து) ஏ, கலைஞா இப்படி எத்தனைக் குடும்பங்களை இந்த நாட்டில் கெடுத்துவிட்டு இங்கும் வந்து விட்டாய் தமிழர்கள் அறிவின் ஆற்றலை உணரும்வரை உன்னைப் போன்றவர்களின் கும்மி அடிப்பு நடக்கும். ஒரு நொடியில் இவ் வரசக் குடும்பத்தைப் புரளியாக்கிவிட்டாய். (மன்னனைப் பார்த்து)மன்னா, இக் குறிஞன் நம்மைக் கலக்கிட வந்த குழப்பக்காரன். அரசே, இதில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டும். இவனை விடவேண்டா இவனைச் சிறையிலடைக்கக் கட்டளையிடுங்கள். (வாளை உருவி கலைஞன் பக்கஞ் செல்லுகிறான்.)

நெடுஞ்சேர : (அதட்டி) நில் படைத்தலைவரே! பரபரப்பு வேண்டா. இவர் புலவராய் நிற்கிறார். இமயவரம்பன் கலைஞர் ஒருவரைச் சிறை வைத்தான் — என்னும் பழிச்சொல் வேண்டா; இப் புலவர் செய்யும் குழப்பத்தால் நமக்கு ஒரு கலங்கமும் வராது. இளங்கோவைத் தடுத்து நிறுத்துங்கள்.

இளங்கோ : அரசே, என் முடிவைத் தடுக்க முயலுவது கரையை உடைத்த வெள்ளத்தை நிறுத்த அணை கட்ட முயலுவதாகும். அது முடியாச்செயல். நான் வருகிறேன். என்னைத் தடுக்காதீர்கள். (வெளியில் செல்ல முயலுகிறான்.)

நெடுஞ்சேர : நில் இளங்கோ, நீ ஏன் துறவியாக வேண்டும்?

இளங்கோ : அண்ணன் செங்குட்டுவன் உயிரோடிருக்கும்போது, இளையவனாகிய நான் அரசனாவது,நம் முறையான பெருமைக்கு இழுக்கு என்பதைத் தாங்கள் அறிவீர்கள். மூத்தவனுக்கு வெடிவைக்கும் என் விதி, அறிவின் வெடியால் மாளட்டும்.

நெடுஞ்சேர : அது, நீ துறவியானால்தான் முடியுமா?

இளங்கோ : ஆம். இந்தப் பேச்சு தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்டதன்று. நாம் இணைந்து பேசி அடங்க, இந்த நாட்டில் குறிக்கலைஞன் கூறும் விதியை நம்பி மதி இழக்கும் மக்களைப் பார்க்கிறோம். அவர்களுடைய வாழ்வில் மூட விதி தலையிட்டு வாழ்வைச் சீரழிக்கிறது. விதியை வென்ற என் துறவு சான்றாக நிற்கட்டும். மாந்தனின் பகுத்தறிவு வளரட்டும்.

நெடுஞ்சேர : அப்படியானால் உன் முடிவை மாற்றிக்கொள்ள மாட்டாயோ?

Scanned with CamScanner

இளங்கோ : அரசே, இது முழுவெற்றி பெற்ற முடிவு. மூட நம்பிக்கையற்ற என் நெஞ்சில் ஊறிய எண்ணத்தின் செயல். வருகிறேன் (போகிறான்).

நெடுஞ்சேர : இளங்கோ, உன் அம்மா!

இளங்கோ : அம்மா!! அப்பா, என்னை மாற்ற உங்களுடைய கடைசிக் கருவியா? நான் கட்டளையை மீறவும் அன்பை வீசி விட்டீர்கள். சில வேளைகளில் அரச கட்டளையை மாந்தன் மீறும் கட்டாயம் ஏற்படும்போது மீறுவான். அவனை அடைத்து வைக்கலாம். ஆயின் அவன் அறிவின் உணர்ச்சியை அடக்கவே முடியாது. தமிழ் வேந்தனல்லரோ நீர்! அன்புக்குத் தனிக் கூறு சமைத்தவனல்லனோ தமிழன்? அதிலும் தாயின் அன்போ விலை உயர்ந்த வைரக்கல். கல் போன்ற என் நெஞ்சை அன்பைக்காட்டி உடைத்து விட்டீர்கள். அவ் வன்பு என்னைக் கலக்கிவிட்டது. தாயே, நீ இவ் வவையிலில்லை. உன்னை மறந்து நான் துறவியாகி விட்டேன். அன்பின் இலக்கணம் மன்னிப்பது. என்னை மன்னித்துவிடு. உன்னை மறந்து துறவியாகி விட்டேன்.

செங்குட்டுவன் : (எழுந்து இளங்கோவின் கைகளைப் பிடித்து) தம்பீ, என் நெஞ்சு நின்றுவிடும் போலிருக்கிறது. நற்றமிழ் கற்றவனே. பெற்றவளை மறந்த உன் துறவு எங்களுக்கோர் இழவு. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றமிழருக்கு நனி சிறந்தனவே. அதை அறிந்தவன் தானே நீ. வேண்டாம் இளங்கோ துறவு. எனக்கு இது பெருந்துன்பந் தரவல்லது. நான் கடற்கொள்ளையரை அழிக்கப் புறப்படுகிறேன். நீ முடிபுனைந்து அரசனாக இரு.

இளங்கோ : அண்ணா! அவன் சொன்ன விதியின் விளையாட்டை என் அறிவுவெல்லட்டும். தடுக்காதீர்கள் என்னை. மாந்தனுக்குத் துணையாவது விதியா அல்லது மதியா என்பதை இனி இந்நாடு அறியட்டும். விதிப்படி நடக்கட்டும் என்றிருந்தால், அரசுக்கு இழுக்குவரும். அதைத் தாங்கள் விரும்புகிறீர்களா?

செங்குட்டுவன் : இளவலே! அரசமுறைக்கு இழுக்குவர நான் ஒத்துக்கொள்ளவில்லை. கடல் கொள்ளையரை வெல்லச் செல்லுகிறேன். அங்கு நான் மாண்டால்.........

இளங்கோ : (சட்டென்று செங்குட்டுவனின் வாயைத் தன் கையால் பொத்தி) அண்ணா!!

செங்குட்டுவன் : (இளங்கோவின் கையை நீக்கி) நீதான் அரசன்.

இளங்கோ : என்ன கற்பனை! விதியை வெல்லப் புறப்பட்டு விட்டேன். என் அறிவைக் கெடுக்காதீர்கள். நான் போகிறேன். (போக முயலுகிறான்.)

செங்குட்டுவன் : இளங்கோ! அம்மாவிற்கு என்ன சொல்லுகிறாய்?

இளங்கோ: ஆம்! என்னைப் பெற்றதாய் பாலூட்டிப் பைந்தமிழை யும் கற்கச்செய்தாள். அதன் விளைவே என் அறிவு. என்னைப் பெற்று வளர்த்த தாய் தமிழ்த் தாயின் கையில் ஒப்படைத்து விட்டாள்; இனித் தமிழ்த்தாய், என்னைக் காப்பாள். அன்னை யிடம் கூறிவிடுங்கள். (துறவியாகப் போய்விட்டான்)

செங்குட்டுவன்: (தரையில் சாய்ந்து கொண்டே) தம்பீ (அமைச் சர் படைத்தலைவர் செங்குட்டுவனைக் கீழே விழுந்து விடாத படி தாங்குகிறார்கள்.)

நெடுஞ்சேர: போயே விட்டான். எல்லாரும் விதி விளையாடும் என்பர். என்னில் அறிவு விளையாடி விட்டது.

படைத்தலை: (குறிஞன் பக்கஞ்சென்று) அறிவாளியே! பார்த் தாயா?! உன் கூற்றின் விளைவை? ஏய் எத்தனை நாளாய்க் காத்திருந்தாய் சேரனின் குடியைச் சீரழிக்க? விதியென்று கூறி மன்னனின் மதியைக் கலக்கி விட்டாய். இளங்கோவின் விதிக் கணக்கைப் பார்த்த நீ (வாளை ஓங்கி) உன் விதியின் கணக்கைப் பார்த்துக்கொள். என் வாளுக்கு இரையாகு.

நெடுஞ்சேர: (சட்டென்று எழுந்து) நிறுத்து. வாளை உறையில் போடு. தானைத்தலைவா, உன் வாள் போர்க்களத்தில் ஆடினால் கலை. அது போர்க்கலை. உன் மறச்செயலுக்குச் சிலை வைப்பேன். இங்கு உன் வாள் விளையாடினால் அது கொலை; அஃது ஒரு கொடுங்கோலை. உன் இழிசெயலுக்கு உன்னைச் சிறை வைப்பேன்; எச்சரிக்கை.

அமை: மறைபொருள் உணர்ந்த மன்னவா! கரை காணாத துயரைக் கண்ணிமைக்கும் நேரத்தில்-தந்த இக் குறிஞன்மீது இரக்கமா?

நெடுஞ்சேர: அமைச்சரே, ஆம். அரசனுக்குக் கண்ணோட்டம் வேண்டும். எதிராய்வில் விருப்பு வெறுப்பில்லா நடுநிலைமை வேண்டும், அதனால்தான் அரசனை இறை என்று கூறுவர் தமிழர். இன்னும் கேளும்; மக்களை ஆள அரசியல் சூழ்ச்சி வேண்டும். மக்களை ஆளும் மன்னனுக்கு அறிவு வேண்டும். ஆனால், மக்களுக்கு அது அவ்வளவாக இருத்தல் கூடாது.

அமை: ஏன் மன்னா?

நெடுஞ்சேர: மக்களுடைய எண்ணத்தை ஒரே வழியில் இருக்கச் செய்துவிட்டால், மன்னன் தான் மக்களால் ஆளப்படுவான். மக்களின் எண்ணங்களைச் சிதறடிக்க நாட்டில் இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளைப் பரப்பும் ஒரு கூட்டம் தேவைப்படத் தான் செய்கிறது. விதி என்று ஒன்றிருந்தால் மக்களுடைய வாழ்விற்கும் தாழ்விற்கும் விதியே காரணியமென்றிருந்து விடுவர்; இல்லாதுபோனால் அரசு செய்யும் சில தன்னலச் செயல்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வர். அவர்களுக்குச் சிந்தனை வளரக்கூடாதென்பதற்காகத்தான் அரசன் கோவில் களைக் கட்டிக் கும்பிடச்சென்று மக்களைப் பின்பற்றவைப்பது. மக்கள் குறைகளைக் கடவுளிடம் கூறுவார்கள், நம்மிடம்கூறார்.

வெட்கம்

(மறியடி வியனிலைச் சிந்து)

— சரங்கை பன்னீர்ச் செல்வன்

1. இனம்வாழச் செந்நீரைச் சிந்து—தமிழ்
இனத்துக்குப் பகையாவோன் எவனென்ன, கொந்து;
மனம்மாற இனிக்காலம் இல்லை—தன்
மானத்தை இழந்தவனோ மதிப்பானுன் சொல்லை!
(இந்த...இனம் வாழச்...)

2. நறுமையென நரிமைகளை நம்பும்—தனி
நாட்டுரிமை இழந்துவிட்டு நாள்தோறும் வெம்பும்;
வறுமையினால் மூடமான வாழ்க்கை—துளி
வருவாய்க்கே அங்காந்து வாய்பார்க்கும் பூழ்க்கை!
(இந்த...இனம் வாழச்...)

3. அறியாமைப் பனிச்சிறையில் உறைந்து—பகுத்
தறிவாண்மைத் திறன்குன்றி மடமைகளால் நிறைந்து;
மறிபோல அசைபோட்டு மயங்கும்—தன்
மகிழ்வுக்குத் தறிகெட்டு மனப்போக்கில் இயங்கும்!
(இந்த...இனம் வாழச்...)

4. பதவிக்குப் பிறன்புகழைப் பாடும்—தமிழ்ப்
பண்பாட்டை மானமிலாப் பார்ப்பான்போல் சாடும்;
உதவிக்கு வருதமிழன் ஒழிக்கும்—தான்
உயர்நிலையை எய்தியதும் உடன்பிறப்பைப் பழிக்கும்;
(இந்த...இனம் வாழச்...)

5. காசுக்கே ஒப்போலை விற்கும்—பகைக்
கால்வருடிப் பல்லிளித்துக் கைகூப்பி நிற்கும்,
ஏசுக்கே ஊதாசை ஒக்கும்—சில
இனக்கேடர் தமிழருளும் இருக்கின்றார்—வெட்கம்!
(இந்த...இனம் வாழச்...)

நீர்-அரத்தம்; கொந்து-அழி; நறுமை-சிறப்பு; நரிமை-ஏமாற்றச்செய்கை; அங்காந்து-ஏங்கி; மறி-ஆடு; தறிகெட்டு-கட்டுப்பாடின்றி; ஒப்போலை-வாக்குச்சீட்டு; பூழ்க்கை-புழுக்கை)

(முன் பக்கத் தொடர்ச்சி)

அமை : அப்படியென்றால், மன்னு மக்கள் மதி இழந்தவர்களாய் மாறி விடுவார்களே, அதனால் அறிவின் ஆற்றல் குன்றாதா?

நெடுஞ்சேர : குன்றும். அதனைச் சரிசெய்து கொள்ள அறிவுடைய பெரியோரின் துணையை நாம் நாடித், தேவைப்படும் போது திருத்திக் கொள்ளலாம்.

அமை : பின் அறிவுபெற்று அரசனுடைய நடவடிக்கைகளைக் கவனிக்க மாட்டார்களா?

நெடுஞ்சேர : கவனிக்கட்டுமே. அறிவுள்ள பெரியோரின் துணை நமக்கு இருக்க வேண்டும் என்று அதற்காகத்தான் சொன்னேன். அவர்களுடைய நாவன்மையால் அரசைக் காக்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு.

(தொடரும்

தொடர் — 4

தமிழீழத்தை அமைக்க அனைத்துத் தேசச் சட்டம் தடையாக இருக்கிறதா !

— மலர் மாறன்

தமிழக முதல் அமைச்சராக இருக்கும் எம். சி. இராமச்சந்திரன் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை - மாறாக, ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முற்படும் தமிழர்களை மிரட்டி அடக்கவும், குழப்பி ஏமாற்றவும் வேண்டிய செயல்களை செய்துகொண்டு இருந்தார்.

ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற துமுக்கி (துப்பாக்கி) ஏந்திப் போரிட அணியம் என்று பேசிய மதுரை மட வளாகத் தலைவர் மீது ''துமுக்கியை (துப்பாக்கியை)க் காட்டினார்'' என்று எம்.சி. இராமச்சந்திரன் அரசு வழக்குத் தொடர்ந்து இருக்கிறது.

ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற முயற்சி செய்பவர்களை மிரட்டி அடக்க முயன்றார் எம். சி. இராமச்சந்திரன் என்பதைத் தெளிவாகக் காட்டும் ஓர் எடுத்துக்காட்டு ஆகும் இது.

''5 பேருக்கு மேல் கூட்டமாகத் துமுக்கி (துப்பாக்கி)ப் பயிற்சி செய்யக்கூடாது, சிலம்புப் பயிற்சிகூட செய்யக் கூடாது'' என்று உடனடிச் சட்டங்களைப் போட்டதும்-ஈழத் தமிழர்கள் படுகொலைகளைக் கண்டித்துத் துயரநாள் கடைப்பிடித்து, ஊர்வலம் வந்து மாணவர்களைக் காவலர்களைக் கொண்டு கண் மண் தெரியாமல் தாக்கி, நூற்றுக் கணக்கான மாணவர்களைப் படுகாயப் படுத்தியதும், ஈழத் தமிழர்களைக் காக்க முற்படுவோரை மிரட்டி அடிக்க முயன்றார், எம். சி. இராமச்சந்திரன் என்பதைக் காட்டும் மற்ற சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

இப்படி ஒரு பக்கம் மிரட்டிக் கொண்டிருந்தார் - மறுபக்கம் தமிழர்களைக் குழப்பி, அவர்களைச் சரியாகச் சிந்திக்க விடாமல் செய்து, ஏமாற்றுவதற்குப் பலவகைத் தவறான கருத்துப்பரவல்களைச் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்.

தமிழர்களைக் குழப்பி ஏமாற்றும் இத்தகைய முயற்சியில், அவருடைய கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்த செயலலிதாவும், செய்தித்தாள் வலிவைத் தம் கையிலே வைத்துள்ள தமிழர்களின் உடன் இருந்தே கொல்லும் நோய்க் கும்பலும் முழு மூச்சுடன் இறங்கிச் செயல்பட்டுக் கொண்டிருந்தனர் — இருக்கின்றனர்.

எத்தனை வகையான குழப்ப உரைகள்? — ஏமாற்றுச் செயல்கள்? ......அப்பப்பா......!

Scanned with CamScanner

குழப்ப உரை - !

“இலங்கை வேறு நாடு; இந்தியா வேறு நாடு — ஆகவே இந்தியாவிலுள்ள நாம், ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற முற்படுவது அனைத்துத் தேசச் சட்டப்படி குற்றமாகும்”. - இப்படி ஒரு கருத்துப் பரப்புதல் தமிழகத்திலே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

நாடும், அரசும் மக்களைக் காப்பாற்றுவதற்குத்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த நாட்டிலே ஓர் இனத்தினரை அந்த அரசே திட்டமிட்டுப் படுகொலைகளைச் செய்து, அழித்துவிட முற்பட்டால் அந்த இனத்தைக் காப்பாற்றும் அரசு அதுவன்று என்ற நிலை ஏற்பட்டு விடுகின்றது. இந்த நிலையில் அந்த இனமக்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள தனி அரசையும் நாட்டையும் உருவாக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அப்படித் தனி நாட்டை உருவாக்கிக் கொள்வதற்கு அனைத்துத் தேசச் சட்டங்கள் வழி முறைகளை வகுத்துக் கூறியுள்ளன. மரபுவழி உரிமை (Succession) புரட்சி (Revolt) என்பன அவற்றில் சில வழி முறைகள் ஆகும்.

இலங்கையிலே சிங்கள அரசு தமிழ்மக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்து கொண்டிருக்கின்றது. தமிழர்களைப் பூண்டோடு ஒழிப்பேன் என செயவர்த்தனா கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில், ஈழத்தமிழர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள உரிமையுடன் ஈழத்தமிழ் நாட்டை அடைவதைத் தவிர வேறு வழியேதும் இல்லை. அனைத்துத் தேசச் சட்டப்படி அது தவறானதும் அன்று.

அனைத்துத் தேசச் சட்டம் நாடுகளின் சட்டங்களைப் போன்றது அன்று. நாடுகளின் சட்டங்களை மீறினால் கண்டிப்பாகத் தண்டனைக் கொடுக்கப்படும். ஆனால் அரம்பத்தனம் செய்து கொண்டு அனைத்துத் தேசச் சட்டத்தை மீறும் நாடுகளைக்கூட அனைத்துத் தேசச் சட்டத்தால் தண்டிக்க முடிவதில்லை.

ஆயிரக்கணக்கான ஒன்றுமறியாத் தமிழர்களைப் படைத்துறையினரை ஏவிப் படுகொலைகள் செய்து கொண்டிருக்கின்றார், செயவர்த்தனா. அனைத்துத் தேசச் சட்டப்படி இந்தக் குற்றங்களுக்கு செயவர்த்தனாவுக்குத் தூக்குத்தண்டனை கொடுக்கவேண்டும். அவருக்குத் தண்டனை கொடுக்க யாரும் முன்வரவில்லையே. . . .! அவர் செய்வது குற்றம் என்று கூறி வழக்குக்கூட போடப்படவில்லையே ....!

தமிழ் மக்களைப் படுகொலைகள் செய்து கொண்டிருக்கும் செயவர்த்தனா, தமது செயல் அனைத்துத்தேசச் சட்டப்படி தவறானது என்று கூறிக்கொண்டிருக்கவில்லை. ஆனால் அழிக்கப்பட்டுக்

கொண்டிருக்கும் நம் ஈழத்தமிழ் இனத்தை நாம் காப்பாற்ற முற்படுவது குற்றமானது என்று தமிழ்மக்களிடம் கருத்துப்பரப்புதல் செய்து தமிழர்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றார்கள், தமிழ்நாட்டை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள். சைப்ரசு தீவிலுள்ள துருக்கியர்களைக் காப்பாற்ற துருக்கி அரசு தனது படைத்துறையையே சைப்ரசு தீவிற்கு அனுப்பி உள்ளது. அந்த அடிப்படையில் ஈழத்தமிழர்களைக் காக்க இந்தியத் தமிழர்கள் தொண்டர்படை அனுப்புவதில் ஒரு தவறும் இல்லை.

குழப்ப உரை — 2

இலங்கையிலே 35 இலக்கம் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். அவர்களில் 10 இலக்கம் பேர் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள். மலையகத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். 25 இலக்கம் பேர் இலங்கையிலே ஆயிரமாயிரமாண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பழந்தமிழர்கள்.

மலையகத்தமிழர்கள் சிங்களவர்களின் நடுவில் சிறுபான்மையராக வாழுகின்றார்கள். பழந்தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் சிறுபான்மையராக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஈழத்தமிழ் நாடு விடுதலை அடைந்துவிட்டால் 25 இலக்கம் பழந்தமிழர்களுக்கும் விடுதலை கிடைத்து விடுகின்றது. அதனால் 10 இலக்கம் மலையகத்தமிழர்கள் மட்டும் இலங்கையில் வாழும் சூழ்நிலை ஏற்படுகின்றது.

'35 இலக்கம் தமிழர்கள் இலங்கையில் இருக்கும்போதே, மலையகத்தமிழர்களைச் சிங்களவர்கள் கொடுமைப்படுத்துகின்றனர். அந்த எண்ணிக்கை 10 இலக்கமாகக் குறைந்துவிட்டால், மலையகத் தமிழர்கள் மீது சிங்களவர்கள் இழைக்கும் கொடுமை தாங்க முடியாததாகப் போய்விடும். ஆகவே ஈழத்தமிழ் நாட்டை விடுதலை அடையச் செய்தால், அதனால் பழந்தமிழர்களுக்குத்தான் நன்மையே தவிர, இந்தியாவிலிருந்து சென்ற மலையகத்தமிழர்களுக்குத் தீமை தான் அதிகமாகும். என்ற ஒரு தவறான கருத்துப் பரப்புதலைத் தமிழகத்திலே உலவ விட்டுள்ளனர், எம். சி. இராமச்சந்திரனின் கொள்கைப் பரப்பு செயலாளியும், தமிழர்களின் உடனிருந்தே கொல்லும் நோய்க்கும்பலும். இந்தக் கருத்தை இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களின் தலைவர் திரு தொண்டைமானையே கூறும்படி செய்துள்ளனர். தென் தமிழகத்தில் வாழும் ஒரு முரட்டுச் சட்டைப் பாராளுமன்ற உறுப்பினரும் இக் கருத்தைக் கூறிக் கொண்டு திரிகின்றார்.

இந்த கருத்தை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் உண்மையானது போன்று தோன்றும். ஆழ்ந்து, சிந்தித்துப் பார்த்தால் எவ்வளவு தவறான கருத்து என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

எப்படி எனில் . . . . . ?

25 இலக்கம் பழந்தமிழர்களுக்கு உரிமையுள்ள ஈழத்தமிழ் நாடு அமைத்து விட்டால் அங்கே தமிழர்களுக்கு என்று ஓர் அரசு அமைந்து விடுகின்றது; தமிழர்ப் படைத்துறையும் அமைக்கப்பட்டு விடும்.

இலங்கையிலே சிங்களவர்கள் பெரும்பான்மையாகவும் மலையகத் தமிழர்கள் சிறுபான்மையாகவும் இருப்பதுபோன்று, உரிமையுடைய ஈழத்தமிழ் நாட்டிலே தமிழர்கள் பெரும்பான்மையாகவும் சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் இருப்பார்கள்.

இலங்கையிலே சிங்கள அரசு மலையகத்தமிழர்களைக்கொடுமைப் படுத்தி ஏதிலிகளாக ஆக்கினால், அதற்கு எதிரடி கொடுக்க ஈழத் தமிழகத்திலே சிறுபான்மையாக உள்ள சிங்களவர்களை கொடுமைப்படுத்தி ஏதிலிகளாக ஆக்க முடியும்.

அந்த நிலை உருவானால் செயவர்த்தனவும், அவரின் காட்டு விலங்காண்டிச் சிங்கள அரசினரும் வாலைச் சுருட்டிக் கொண்டு பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவார்கள். மலையகத்தமிழர்கள் மேல் கை வைக்க அச்சப்படுவார்கள், சிங்களவர்கள்.

ஆகவே ஈழத்தமிழ் நாடு விடுதலை அடைந்தால், மலையகத் தமிழர்களுக்கு முழுப் பாதுகாப்பும், சம உரிமையும், முழு விடுதலை வாழ்க்கையும் கிடைக்க வழி ஏற்படும்.

நிலைமை இப்படியிருக்க, ஈழத்தமிழ் நாட்டுக்கு விடுதலை அமைந்தால் மலையகத் தமிழர்களுக்குத் தீமை ஏற்படும் என்று தவறாகக் கருத்துப்பரப்புதல் செய்து, தமிழர்களைக் குழப்பி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் எம். சி. இராமச்சந்திரனும், அவரைச் சார்ந்தவர்களும்.

3. மற்ற ஏமாற்றுதல்கள் :

ஈழத்திலே தமிழர்கள் கொல்லப்படும்போது தமிழகத்திலே கொந்தளிப்பு ஏற்படுகின்றது. தமிழ் மக்களைக் குழப்பி ஏமாற்றி அந்த எழுச்சிகளை அடக்கிக் கொண்டிருக்கின்றார், தமிழக முதல் அமைச்சர் எம்.சி. இராமச்சந்திரன்.

1983-சூலையில் இலங்கையிலே ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலைகள் செய்யப்பட்டு இலக்கணக்கான தமிழர்கள் ஏதிலிகளாக ஆக்கப்பட்ட போது தமிழகமே கொதித்து எழுந்தது.

அந்தச் சமயத்தில் தமிழக முதல் அமைச்சர் என்ன செய்திருக்க வேண்டும்?

1970-இல் கிழக்கு வங்க மக்கள் பாக்கித்தான் படையினரால் கொடுமைப்படுத்தப்பட்டபோது, மூக்தி பாகினி தொண்டர் படை

அமைத்துப் போரிட்டுப், பங்களா தேச அரசை முதலில் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தாரே மேற்கு வங்க முதன் அமைச்சர் சித்தார்த் சாங்கர்ரே, அதுபோல் ஈழத்தமிழக விடுதலைத் தொண்டர் படையை ஏற்படுத்தி ஈழத்தமிழ் நாட்டை விடுதலை நாடாக ஆக்கிவிட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், தமிழக முதல் அமைச்சர் எம்.சி. இராமச்சந்திரன்.

அத்தகைய நடவடிக்கையையா எடுத்தார் எம். சி. இராமச்சந்திரன்?

இல்லை :.....!

பொது நிறுத்தங்களையும், கடையடைப்புகளையும், கருப்புச் சட்டை அணிவதையும் செய்துகொண்டிருந்தார்.

அரசுக் கருவிகள் கையில் இல்லாத எதிர்க் கட்சிகள் செய்ய வேண்டிய செயல்கள் இவை. இவற்றை அரசுக் கருவிகளைக் கையில் வைத்துக் கொண்டிருந்த எம்.சி. இராமச்சந்திரன் செய்து கொண்டிருந்தார்.

சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்ற முன் வரவில்லை. அவர்களின் பிணங்களைக் குழியில் போட்டு மூடத் தொகைத் தண்டல் செய்து கொண்டிருந்தார்.

பெண்கள் அமைப்புகளும், செஞ்சிலுவைக் கழகங்களும் செய்து விடும் இச் செயல்களைத் தமிழக அரசைக் கையில் வைத்திருந்த எம்.சி. இராமச்சந்திரன் செய்து கொண்டிருந்தார்.

தமிழக அரசு சரியான நடவடிக்கைகளை எடுக்காததால், ஈழத்தமிழர்கள் சாகடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள்.

(தொடரும்)

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3-00 ,,	4.00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!



1. தமிழா (பாடல்கள்).

ஆசிரியர் : தமிழ்ப்பாவலர் தரங்கை—பன்னீர்ச்செல்வன்.
வெளியீடு : கயற்கண்ணி பதிப்பகம்.
முதனை அஞ்சல், (வழி) ஊமங்கலம்—607804 தெ.ஆ.
பக்கம் : 12; விலை : உரு. 1.

தமிழனை முன்னிருத்தி ஒரே தலைப்பில் பாடிய 50 பாடல்களின் நூல் இது.

பாவலர் தரங்கை-பன்னீர்ச்செல்வன் அவர்கள் தென்மொழியின் தொடக்கக் காலத்து அன்பராகத் தொடர்ந்து இருந்து வருபவர். இவர் பாடல்கள் தென்மொழி மரபுக்கேற்ப, தூய தமிழில் நடையிடும் தகைமை வாய்ந்தவை.

இந்நூலின் தொடக்கத்தில் பாடல் கீழ்வருமாறு தொடங்குகிறது.

குழுகாய வறுமையிலே
குளிர்காயும் அரசியலின்
கூன்நிமிர்த்தல் வேண்டுமடா, தமிழா—உலகம்
நமதாகக் கபவாதம்
நாடகத்தைத் திறனும்
நடுநெஞ்சைத் தூண்டிடடா, தமிழா!

தமிழினம் தன்னைத் திருத்திக்கொள்வதற்குப் பலவகையான உளவு முறைகளைப் பாடல் நெடுகவும் கூறுகிறார், பாவலர். அவற்றுள் சில.

குலப்பெயரால் மதப்பெயரால்
கூட்டுகின்ற மாநாட்டுக்
கூக்குரலை நாடாதே, தமிழா—நம்மைப்
பலப்பலவாய்ப் பகுத்துவிட்டுப்
பகற்கொள்ளை யடிப்போரின்
பாசாங்கைப் பாடாதே, தமிழா!

தமிழனின் போலி அரசியல் வாழ்வைக் கடிகிறார், ஒரு பாட்டில்.

பேசுதலோ, பொதுவுடைமை;
பேணுதலோ பார்ப்பனியம்;
பிழைபட்ட பொதுவாழ்க்கை, தமிழா—சற்றும்
கூசுதலே இல்லாமல்
கொடுத்தழைப்பார் கட்சிமாறும்
கோதாட்டப் புதுவாழ்க்கை, தமிழா!

கட்சிப் பெருக்கமும் பதவி ஆசையும் தமிழனை என்னமாய் அலைக்கழிக்கின்றன! அவற்றை மிகவும் நயமாகவும் குத்தலாகவும் கடிகிறார்.

நாளுக்கொரு புதுக்கட்சி;
ஆளுக்கொரு குலப்பிரிவு;
நாற்காலி தேடுகின்றாய், தமிழா!

— மொழி, இன, நாட்டு முயற்சிகள் எளிதில்லை; நல்லவரும், வல்லவரும் ஒருங்கிணைந்து செய்ய வேண்டிய பணி அது. எழுத்தாளர்கள், பாவலர்கள் ஒன்றாகச் சிந்தித்து மக்களிடம் கருத்துகளைக் கொண்டு செலுத்தும் பணி அது. அதில் தம் கடமையுணர்வைப் பாடல்களாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர் பன்னீர்ச் செல்வம். தங்கள் வயிற்றுக்காகவும், வாழ்க்கைக்காகவும் எழுதுபவர்களைக் காட்டிலும், தமிழன் வாழ்வுக்காகவும், அவர்களின் நலத்துக்காகவும் எழுதுவது பாராட்டக்கூடியதும் பெருமைப் படுத்தக் கூடியதும் அன்றோ? அவ்வகையில் பாவலரைப் பல்லாற்றானும் பாராட்டுகிறோம்; போற்றுகிறோம்! இவர் பாடல்கள் கொள்கைப் பாடல்கள்; தூய்தமிழ்ப் பாடல்கள்; இனியவை; சுவை உடையவை! விலை கொஞ்சம் கூடுதலாக இருக்குமோ?

2. அருள்மிகு அடைக்கல அன்னை புகழ் (பாடல்கள்)

ஆசிரியர் : இளந்தமிழன்.

வெளியீடு : கிடைக்குமிடம் : அ. மரியகுசை.
173, பெரிய கம்மாளத்தெரு, திருச்சி-8.

பக்கம் : 10; விலை: குறிப்பிடப்பெறவில்லை.

பதினொன்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய மண்டிலத்தால், அன்னை அடைக்கல மேரியின் புகழ் பாடிய பத்து பாடல்களின் தொகுப்பு நூல் இது. ஒவ்வொரு பாடலும் இனிய தூய தமிழில் தட்டுப் படாத சந்த ஓசையில், உயர்ந்த பொருள்களை உள்ளடக்கி, மனத்தை உருக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ஓர் எடுத்துக் காட்டு:

ஊரார்க்கென் றுழைப்போனை ஓர்நாளில் எல்லாரும்
ஒப்பாமல் தூற்றி இகழ்வார்;
ஊட்டிவிட்ட குருவினையும் ஓர்நாளில் மாணக்கன்
ஊரார்க்கு முன்னர் வெறுப்பான்.
பேரார்ந்த செல்வனையும் பின்னாளில் குமுகாயம்
பேசாமற் பேசி ஒதுக்கும்;
பேச்சோடு சுவைசேர்த்த பேதைதன் கொண்கனையும்
பேர்சொல்லி ஏசி மகிழ்வாள்,
நீரார்ந்த நெல்வயல்சூழ் சீரார்ந்த திருச்சியிலே
நெடுங்காலம் நின்ற திருவே,
நெஞ்சார நினைத்தேனை அஞ்சாதே எனத்தேற்றி
நிரல்செய்த தெய்வ நலமே!

ஆராரோ பாடியெனை ஆட்டிவிட்ட தொட்டில்முதல்
ஆட்கொண்ட தெய்வ மகளே!
ஆலைப்போல் நிழலையும் அருள்கொண்ட தாளிணைக்கே
அடைக்கலம்யாம் அன்னை மரியே!

பாடல்கள் மிகவும் சுவையும் அருமையான கற்பனை வளமும் கொண்டு விளங்குவது மிகவும் பாராட்டத்தக்கது. இந்தப் பாடலைப் பாருங்கள்.

நாரில்லா மாம்பழமும் நற்சுவைசேர் கற்கண்டும்
நாள்பறித்த கோவைப் பழமும்
நறுந்தேனும் குறும்பலவின் நரம்பில்லாச் சுளைக்கனியும்
நனிகாய்ந்த பாலும் பருப்பும்
காரில்லா நாட்டவனின் சாறில்லா ஈச்சையுடன்
கனிந்தமலை வாழைப் பழமும்,
கடியுண்ணு முன்சுவைக்கும் கொடிமுந்தி ரிப்பழமும்
கலந்திடுதெள் ளமிழ்து தருமோ?
சீரில்லாச் செயல்செய்த சிறியேனைக் காக்கின்ற
திருக்கடைக்கண் பார்வை யதற்கே!

சில விடங்களில் இலக்கணப் பிழையும் (பேதைத்தன், நரம்பில்லா சுளை, சீரில்லா செயல்), கடுஞ்சொல் புணர்ச்சியும் (ஒப்பாமற் நூற்றி, கொடுத்தோமெம்) தவிர்த்திருக்கலாம். பாவலர் இளந்தமிழனைப் பல்லாற்றானும் வாழ்த்துகிறோம்.

3. Essentials of English Grammar and Composition.

ஆசிரியர் : ப. பாலகிருட்டிணன் க.மு., கல்.இ.,

வெளியீடு : மீனாட்சி வெளியீடு, அரியலூர்—621704
திருச்சி (மா.வ.)

பக்கங்கள் : 104, விலை : 6-00.

ஆங்கில மொழி இலக்கணங்களில் முகாமையான பயன்படுத்தங்களையும், அதன் அடிப்படைகளையும் விளக்கும் பொருட்டுச் சுருக்கமாக ஒரு நூல் கொண்டுவரப்பெறவேண்டும் என்னும் நோக்கில் இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது.

இடைநிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கில் எழுதப்பெற்ற இந்நூலில் வழக்கமாகப் பள்ளி அளவில் உயிரெழுத்துகள் (Vowles) என்பது பற்றிச் சொல்லித் தருவது போலன்றல்லாமல்

"Vowels ars Vocal sounds made without any audible stopping of the breath"

— என்ற உண்மை விளக்கம் கொடுத்து, ஆங்கிலத்தில் உள்ள 12 உயிரெழுத்துகளையும் (vowels', 8 உயிரிணை எழுத்துகளையும் (dipthongs) 24 மெய்யெழுத்துகளையும் (Consonants) வகைப் படுத்தியிருப்பது சிறப்பானதாயினும், அவை விளக்கமாக இல்லாதது பள்ளி மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்குக் கடினமாக இருக்கும்.

Scanned with CamScanner

செய்திகள்

1. திருச்சி — மிகுமின் தொழிலகம் பயிற்சிப்பள்ளி விடுதி — சிறப்புச் சொற்பொழிவு :

கடந்த 1-2-85 மாலை 7.30 மணியளவில், திருச்சி, திருவெறும்பூர், மிகுமின் தொழிலகம் — பயிற்சிப் பள்ளி விடுதியில், விடுதி மேலாளர் தலைமையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இந்தியாவில் உள்ள தொழில் வளர்ச்சி எவ்வெவ்வகையில் மேம்பட்டுள்ளது என்றும், ஆனால் தொழிலிலிருந்து கிடைக்கும் பயன் விளைவுகள் எப்படித் தொழிலாளரின் நலன்களுக்குப் பயன்படாமல் உள்ளன என்றும், பாவலரேறு அவர்கள் ஏறத்தாழ $1\frac{1}{2}$ மணி நேரம் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். பயிற்சிப் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் கூட்டத்தில் நிறைந்திருந்து அமைதியாக இருந்து இறுதிவரை கேட்டனர். தொடக்கத்தில் திரு. குழந்தை-ஈகவரசன் தமிழ்த் தாய் வாழ்த்துப்பாட, திரு. கி. பாலசுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். இறுதியில் திரு. வெ. வீரமணி நன்றியுரை கூற நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. இந் நிகழ்ச்சி, திருச்சி மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு. நாரா. மகிழ்நனால் ஏற்பாடு செய்யப் பெற்றது.

2. இசையின்பன் இரஞ்சிதம் வாழ்க !

சென்ற 4-2-85 அன்று காலை 9 மணியளவில், சென்னை எழும்பூர் அசோகா விடுதியில், குடியேற்றம், ஒய்வுபெற்ற தலைமை

(முன் பக்கத் தொடர்ச்சி)

மற்றபடி Noun, Pronoun, adverb போன்று பலவற்றைப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் சிறப்பாகத் தொகுத்து கொடுத்திருக்கிறார் ஆசிரியர்.

எதிர்ச் சொற்கள் (antonym), பெயர்ச் சொல்லின் தன்மை விளக்கச் சொற்கள் (Adjectives), வினைச் சொல்லின் செயல் விளக்கச் சொற்கள் (Adverb), வினைச் சொல்லின் கால வேறுபாட்டு மாறுதல்கள்—இவை பயனுள்ள முறையில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் வினை, (Verb), காலம் (Tense), இவை போன்றவை விளக்கமில்லாமல் இருப்பது குறையாக உள்ளது.

Wren & Martin, A.C. Gimson A.G. Gardiner இவர்களின் நூல்களின் துணைக்கொண்டு இச் சிறு நூல் நிறைவான விளக்கத்தோடு எழுதப்பெறவில்லையானாலும், பள்ளி மாணவர்களுக்குப் பயனுள்ள நூலாகும். 0

ஆசிரியர் திருவாளர்கள் வா. மு. சேரமன்—பாலாமணியம்மாள் இணையரின் மகன் செல்வன் இசையின்பன் அவர்களுக்கும், சென்னை, கூட்டுறவு பால் ஒன்றியம் சார்பதிவாளர் திருவாளர்கள் சா. இராமையா—உருக்குமணியம்மாள் இணையரின் மகள் செல்வி இரஞ்சிதத்திற்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சித் தொடக்கத்தில் திரு வா. மு. சேரமன் அனைவரையும் வரவேற்றார். தலைவரின் முன்னுரை, திருமண நிகழ்ச்சி ஆகியவற்றைத் தொடர்ந்து, மணமக்களை வாழ்த்தி திருவாளர்கள், சென்னை மாநிலக்கல்லூரி பேராசிரியர் திரு. சு. இலட்சுமணன் க. மு., புலவர் திரு. இரா. கிருட்டிணசாமி ஆகியோர் நல்லுரை வழங்கினார்கள். இறுதியாக, பாவலரேறு அவர்கள் மணமக்களை வாழ்த்தும் முகத்தான் ஏறத்தாழ 1½ மணி நேரம், திருமணத் தொடர்பான விளக்கங்களையும் வாழ்வியல் சார்ந்த கருத்துரைகளையும் மிக விரிவாக எடுத்துரைத்தார்கள். இறுதியில் திரு. சா. இராமையா அவர்களின் நன்றியுரைக்குப் பின் இனிய விருந்துடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

3. கல்லூரித் தமிழ்ப்பேரவை சிறப்பு நிகழ்ச்சி—கோபி

கோபிசெட்டிபாளையம், கலைக்கல்லூரியின் தமிழ்ப்பேரவை, சிறப்பு நிகழ்ச்சி, சென்ற 1-3-85 வெள்ளி பிற்பகல் 3-30 மணி அளவில் தமிழ்ப்பேரவை மாணவர் தலைவர் திரு. ஆர். தமிழ்ச்செல்வன் தலைமையில் தொடங்கியது. தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், திரு. கா. அரங்கச்செல்வனார் க. மு. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். அடுத்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தமிழ் இலக்கியங்கள் இன்றைய அறிவியல் உலகுக்குப் பொருந்துமா?'—என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இறுதியில் செல்வி. அ. வசந்தரா நன்றிகூற நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

4. பூம்புகார் பேரவைக் கல்லூரி - இளங்கோவடிகள் இலக்கியப் பேரவை - சிறப்பு நிகழ்ச்சி :

சென்ற 13-3-85 அறிவன் கிழமை, பிற்பகல் 3 மணியளவில், தஞ்சை மாவட்டம், மேலையூர், பூம்புகார் பேரவைக் கல்லூரியின் இளங்கோவடிகள் இலக்கியப் பேரவைச் சார்பாக, சிறப்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப்பின், பேரவைச் செயலர் திரு. அரங்க பாசுகர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து, கல்லூரி முதல்வர் திரு. ஆர். எசு. மூர்த்தி, தலைமை உரையாற்றினார். பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் அரிய சிறப்புரை நிகழ்ந்தது. அவர் உரைக்குத் தலைப்பு ஏதும் தரப்பெறவில்லையாதலால், 'தலைப்பில்லை' என்பதையே உரைப்பொருளாகக் கொண்டு, தமிழருடைய இன்றைய வாழ்க்கை

நிலை, தலைப்பில்லாப் பேச்சுபோல் தாறுமாறான அகப்புறச் சிதைவுகளாக உள்ளதையும், இலங்கையில் தமிழீழ மக்கள் மிகக் கொடுமையாகச் சீரழிக்கப் பெறுவதையும், மற்றும் பல வேறு நாடுகளிலும் அவர்கள் நிலையற்று வாழ்ந்து கொண்டிருப்பதையும் எடுத்துக் காட்டி, நம் அருந்தமிழின் மேன்மையையும், தொன்மையையும் அறிவியல் தன்மையையும், அத்தகைய மொழியின மக்கள் இன்று உரிமையற்றுப் பெருமைகுன்றி, நாடோடிகளாக வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாகிய வரலாற்றுத் தாழ்ச்சியையும் மிக விரிவாகவும் விளக்கமாகவும் மாணவர்கள் நிறைந்திருந்து கேட்டு நன்பமும் பயனும் எய்துமாறும் கூறினர். வெளியூர் செல்லும் மாணவர்கள் தாங்கள் வழக்கமாய் போகவேண்டிய பேருந்துகளையும் தவறவிட்டுப் பாவலரேறு அவர்களின் பேச்சில் மூழ்கி இருந்தது கண்டு ஆசிரியர்களும், கல்லூரி முதல்வரும் மிக வியந்து பேசினர். கல்லூரி வரலாற்றிலேயே மாணவர்கள் இவ்வாறு நடந்து கொண்டதில்லை என்றும் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பாவலரேறு அவர்களுடன், திருவாளர்கள் மயிலாடுதுறை நெடுமாறன், சிரிதரன், முன்னாள் தென்மொழி அமைச்சர் இளமுருகன் ஆகியோர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அரசினர் உயர்நிலைப் பள்ளி, இலக்கியமன்ற ஆண்டுவிழா நிறைவு நிகழ்ச்சிகள் — துங்கபுரம்

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், துங்கபுரம் அரசினர் உயர்நிலைப்பள்ளியின் இலக்கிய மன்ற நிறைவு நிகழ்ச்சியும், ஆண்டுவிழாவும், கலையரங்கக் கட்டிடக் கால்கோள் விழாவும் ஒன்றிணைந்து, கடந்த 23-3-85-ஆம் பக்கல் காரிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் பள்ளி வளாகத்துள், சிறப்புற நடைபெற்றன. அதுபோது, அரியலூர், மாவட்டக் கல்வி அலுவலர் திரு. இரா. நாகராசன் தலைமை தாங்கினர். கட்டிடக் குழுத் தலைவர் திரு. அ. ஆதிமூலம் முன்னிலை ஏற்றார். விழாப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கும், தேர்வுகளில் முதனிலை பெற்றவர்களுக்கும், அரியலூர் பொத்தகப் பெருவணிகர் திரு. சி.எம். நடேசனார் நினைவுப் பரிசுகளை,மாண்புமிகு. அ. அருணாசலம் (பழந்தமிழர் நலத்துறை அமைச்சர்)அவர்கள் வழங்கினர். சாரண மாணவர்களுக்கான பரிசுகளை, வேப்பூர் அ.தி.மு.க. அமைப்பாளர் திரு. ப. கிருட்டிணன் அவர்கள் வழங்கினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'கலையுணர்வும் அறிவுணர்வும்' என்னுந் தலைப்பில் மிகவும் அரிய கருத்துகளை மாணவர்கள் மனங் கொள்ளுமாறும் மகிழுமாறும் எடுத்துரைத்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் மாணவச் செயலர் கருப்பையா நன்றிகூற, நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது. பள்ளித் தலைமை ஆசிரியரும், இலக்கிய மன்றத் தலைவருமாகிய புலவர். செவ்வண்ணன் அவர்களின் பொறுப்பில் இயங்கும் இப் பள்ளி, மிகவும் சிறப்புடன் நடத்தப் பெறுவது குறிப்பிடத்தக்கது. 0

காய்ச்சிகள் அனைவர்க்கும் தெரிந்ததாக வேண்டும். இதற்கென்ன வழி? அதனை உடனே செய்யுங்கள்!

திரைப்படத்துறையில் ஈடுபாடுகொண்டு தங்கள் கருத்துகளைத் திரைப்படவாயிலாகத் தமிழக மக்களுக்குச் சொல்லுங்கள்.

தங்கள் உண்மையுள்ள, — த. முல்லைவழுதி, தூத்துக்குடி-2

0: 1070 : எங்கள் அன்புக்கும், பாசத்துக்கும் பெருமதிப்புக்குமுரிய உ.த.மு.க. முதல்வர் அய்யா, அவர்களுக்குக் கரிகாலன் வணக்கத்துடன் வரையும் அன்பு மடல். அய்யா! சில நாள்கள் இடைவெளிக்குப் பின்னர் உங்களுக்கு மடல் எழுதும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மிகவும் பெருமை பெறுகிறேன். நான் எழுதிய மடலினை நீங்கள் ‘தென்மொழி”யில் வெளியிட்டிருந்தீர்கள். அடுத்து நான் அனுப்பிய ‘இன விடுதலைக்குப் போராடும் வடக்கு அயர்லாந்து நாட்டு மக்கள்’ எனும் கட்டுரையையும் ‘தமிழ்நிலத்’தில் வெளியிட்டு என் எழுத்துகளுக்கு ஒரு வாய்ப்புத் தந்தீர்கள்? அதனைப் பார்த்து நான் பூரித்துப்போனேன்! தமிழ்நிலத்துக்கு என் உழைப்பினை நல்கிட நீங்கள் எனக்குத் தந்த ஊக்கத்தால் உங்கள் தலைமையின் கீழ் ‘தமிழ்நிலம்’ மீட்கப்பட என் எஞ்சிய வாழ்நாள் பகுதியில் உங்கள் அன்புத் தொண்டனாக இருந்து தமிழக விடுதலைக்குப் பாடுபடுவேன்.

அய்யா! சில திங்களாக நீங்கள் ‘தென்மொழி’யிலும், தமிழ்நிலம்’ இதழ்களிலும் எழுதி வருவதிலிருந்து நீங்கள் எந்த அளவுக்கு மனவருத்தம் அடைந்திருக்கிறீர்கள் என உணர முடிகிறது. நீங்கள் விரும்பி இருந்தால் பொருள்நிறைந்த வளமான வாழ்க்கையைத் தங்களுக்கு என்று அமைத்துக்கொண்டு இருக்கலாம். தமிழினத்தின் மீதும், தமிழ்மொழி மீதும் நீங்கள் கொண்ட காலத்தாலும் அழியாத ‘புனிதமான காதலால்’ வளமான வாழ்க்கையை இழந்து தமிழின நலம் நாடி, தமிழின மீட்சிக்காக உங்கள் வாழ்நாளெல்லாம் பாடுபட்டு வருகிறீர்கள். எந்த இன மக்களின் குமுகாய உயர்வுக்காக அரத்தக் கண்ணீர் வடிக்கிறீர்களோ, அந்த மக்கள் கவர்ச்சி அரசியல் கழகங்களுக்குப்பின் இன்று செல்லலாம். மோடிமசுத்தான் கண்கட்டு வேடிக்கைகளுக்குக் கூடுவதுபோல் அவர்கள் சேர்ந்தாலும், உறுதியாக உ.த.மு.க.வின் பால் திரும்பிப் பார்க்கத்தான் போகிறார்கள். உங்களுடைய இனவுணர்வும் மொழி உணர்வும், உங்கள் எழுத்தாற்றலும் என்னைப்போன்ற ஆயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களை உங்கள் தலைமையினை ஏற்கச்செய்தன. ரூசோவின் ‘குமுதாய ஒப்பந்தம்’ பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டது. ‘காரல்மார்க்சின் ‘முதலீடு’ நூல் பொதுவுடைமைக் குமுகாயம் மலரச் செய்தது. இலெனின் எழுத்துப் புரட்சி, உருசிய நாட்டு மக்கள் சார்மன்னன் ஆட்சியை ஒழித்து விடுவித்து. சோவியத்து ஆட்சியை ஏற்படுத்தியது. அதுபோல், அவர்களின் எழுத்தாற்றல் எல்லாம் உங்களிடம் அமைந்துள்ளன. உங்களுடைய ஆற்றல் மிக்க எழுத்தாக்கங்களால், எதிர்காலத்தில் வசதியாகப் ‘புதிய தமிழகம்’ உருவாகப்போகிறது. தமிழர்கள் விழிப்புற்று ஐந்து கோடி தமிழர்கள், உங்கள் அணியில் சேரப் போகிறார்கள். வெற்றி உங்களுக்கு (எங்களுக்கு) உறுதி. குறிப்பாக அய்யா, தங்களை நாங்கள் வேண்டுவதெல்லாம் ‘தமிழ்நிலம்’ மீட்சிக்காக, உங்கள் உடல் நலத்தைக் கண்டிப்பாகப் பேணவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். விரைவில் உங்களைச் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன். வணக்கம். இப்படிக்கு,

— கரிகாலன், வீரமங்கலம்.

0: 1071 : அன்பிற்கும் போற்றுதலுக்கும் உரிய அய்யா அவர்களுக்கு வணக்கம். நன்றி கெட்ட இந்தத் தமிழ்க் குமுகாயத்

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

திற்கு கைம்மாறு எதிர்பாராமல் தாங்கள் செய்யும் தமிழ்த் தொண்டுக்கு, மற்றவர்களைப் போன்றே நானும் ஊறு விளைவிக்கின்றேனே என்று மிகவும் துயரம் கொள்கின்றேன். கடந்த 15 நாட்களுக்கு மேலாகத் திண்டுக்கல்லில் நடைபெறும் ஈழத்தமிழர் கண்காட்சியில், ஈழப்போராளிகளுக்கு உதவியாக என் பெரும் நேரத்தைச் செலவிட்டதால், தங்களின் பதிவஞ்சலைப் பெற்றுக் கூட உடனடியாக விடை எழுத முடியாமைக்கு அய்யா என்னை மன்னித்துக் கொள்ள வேண்டுமாய் வேண்டுகிறேன்.

தாங்கள், எள் முனையிலும் சிறிய செயல் செய்தாலும் அதை மிகப்பெரிதாக விளம்பரம் செய்து, ஆர்ப்பாட்டம் செய்யும் விளம்பரம் தேடிகள் நிறைந்த இந்தத் தமிழகத்தில், அவையெல்லாம் நிலைத்த இன்பம் தருவன வல்ல என்று ஒதுக்கித் தள்ளி விட்டுத் தமிழ் மொழியின் தொன்மையைக் காக்கவும், தமிழினத்தின் உய்வுக்காகவும் பாடுபடும் நிகரற்ற தங்களை மதிக்காமல் இருந்ததனால் தான், தங்களின் நிலுவை மடலுக்கு விடைகூட, எழுதாமல இருந்து விட்டேனோ, என்று நினைத்தேன். உறுதியாக அப்படியெல்லாம் இல்லை. மற்ற தலைவர்களைவிடத் தங்களைத் தான் நான் அன்றும், இன்றும், என்றும் உயர்வாக மதிக்கின்றேன்.

இருப்பினும் அய்யா தங்களிடம் உண்மையைச் சொல்ல விரும்புகின்றேன். பொது நிலையிலும், சொந்த வாழ்க்கையிலும் ஏற்பட்ட சலிப்பு, என்னை மனச்சோர்வு கொள்ளச் செய்துவிட்டது. எதிலும் விழிப்பற்றவனாக இருந்துவிட்டேன். சில நேரங்களில் நாம்தாம் இந்தச் செயலைச் செய்தோமா என்று என்னையே நான் கேட்டதுண்டு. இந்த நிலையில் அய்யாவுக்குக்கூட விடை எழுத மறந்துவிட்டேன். மறந்து விட்டேன் என்பதைவிட விடை எழுதாமல் இருப்பது நலம் என்று விட்டுவிட்டேன்.

அய்யா இந்த நிலையில் தங்களை எண்ணிப் பார்க்கின்றேன்.

இந்தச் சின்ன அகவையிலேயே எனக்கு இவ்வகைத் துயரங்களை எதிர்ப்பைத் தரும் இந்தக் குழகாயத்தை எண்ணிச் சலிப்படைகிறேன்! உண்மைதான். எதிர்ப்பையும் சலிப்பையுமே நாளும் சந்தித்துப் புன்முறுவலுடன் அவற்றை ஏற்றுக்கொண்டு, நன்றி கெட்ட இந்த தமிழ்க் குமுகாயப் பணியைத் தொடர்ந்து தாங்கள் தோளிலே போட்டுக் கொண்டு செல்வதை எண்ணும் பொழுது என்போன்ற பலர் பெருவியப்பு அடைகின்றோம்!

அய்யா நிலுவைத்தொகையை இங்குள்ள தமிழன்பர் பலரிடம் கேட்டுக் கேட்டு நானும் சலிப்படைந்து போய்விட்டேன். இன்னும் 400/-உருபாவிற்கு மேல் வரவேண்டி இருக்கிறது. இதற்கு முன்னால் இரண்டுமுறை இப்படிச் செய்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் திருமிகு கழராம்பன், வீ.அரசெழில் போன்றவர்களிடம் கை மாற்று வாங்கி அனுப்பி இருக்கின்றேன். அவர்களிடம் நான் நிலுவைத் தொகையினைப் பெறவில்லை என்பதற்காகத் தங்களிடம் நிலுவைத் தொகையினைச் செலுத்தாதது தவறுதான் அய்யா.

இத்துடன் உருபா 100/- அனுப்பியுள்ளேன் மீதம் உள்ளதை வருகின்ற சூன் மாதந்திற்குச் செலுத்திவிடுகிறேன். நன்றி

உங்களின் அன்பினிய — சா. தமிழன்பன், திண்டுக்கல்.

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner